25

சித்திர வாசகம்

மூன்றாம் புத்தகம்

விலை 5½ அணா

REGISTRAR OF BOOKS
3 APR 1947
MADRAS

TB
031 (3)
N47
136115

உபாத்தியாயர் குறிப்புக்கள்

மௌன வாசிப்பு:

மாணவர்களை மேன்மேலும் மௌனமாகவும் விரைவாகவும் படிக்கத் தூண்டி, ஊக்கமளித்து வரவேண்டும். உச்சரிப்புக்கான அசைவுகளைக் குறைக்க முயலச் செய்யவேண்டும். வாக்கியத் தொடர்களின் (பாராக் களின்) முக்கிய கருத்தை எடுத்துக் காட்டச் செய்து அடிக்கடி அவர்களைப் பழக்கி வரவேண்டும். படித்த கதைகளைச் சுருக்கமாகச் சொல்லப் பழக்க வேண்டும்.

விரைவாகப் படிக்கும் திறமையையும் பொருளுணர் திறமையையும் வளர்ப்பதற்கேற்ற மௌன வாசிப்புப் பயிற்சிகளை இவ்வகுப்புக்கேற்ற வாறு நாங்கள் தயார் செய்திருக்கிறோம்.

கதை சொல்லுதல்:

பாடம் 11, 12, 15, 16, 17, 18, 22, 23, 24, 25, 27. இந்தப் புஸ்தகத்தில் வந்துள்ள கதைகளை வகுப்பில் மாணவர்களைச் சுருக்கமாகச் சொல்லச் செய்யலாம். ஆனால் ஒரே மாணவன்தான் முழுக் கதையையும் சொல்லவேண்டும் என்பதில்லை. வெவ்வேறு மாணவர்களை, சிறு சிறு பகுதியாகவும் தொடர்ச்சியாகவும்—முந்தியவன் விட்ட இடத்திலிருந்து அடுத்தவன் தொடங்கி—கதையைச் சொல்லச் சொல்லுதல் நல்லது.

சித்திரங்கள்:

சித்திர வாசகம் என்னும் பெயருக்கேற்ப இப்புத்தகத்தில் படங்கள் அதிகமாக இருப்பதைக் கவனித்திருப்பீர்கள். இவ்வாறு நாங்கள் செய்ததன் நோக்கம் இரண்டு. படிக்கும் குழந்தைகளுடைய மனத்தில் சொற்களைப் போலவே படங்களும் விஷயங்களைப் பதியவைப்பன; இவ்விரு வகை யாலும் குழந்தைகள் விஷயங்களை உணருவார்கள். மேலும் இப்படங்களை 'வாய்மொழி வேலை'க்கு ஏற்ற கருவிகளாக உபயோகிக்கலாம். இவற்றைப் பற்றி உபாத்தியாயர் தக்க கேள்விகளைக் கேட்டு, அவற்றுக்கு மாணவர்கள் சொல்லும் விடைகளைத் தொகுத்து ஒன்றாகக் கூறச் செய்யலாம்.

—ஆசிரியர்கள்

சித்திர வாசகம்

மூன்றும் புத்தகம்

CHITRA VASAGAM THIRD BOOK

For Class III or Standard III

ஜே. பி. மாணிக்கம், எம். ஏ., எல். டி.

பே. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 APR 1947
MADRAS

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
MADRAS BANGALORE MYSORE BEZWADA COLOMBO
1947

Fifth Edition 1947 TM

Approved by the Madras Text-Book Committee for class use—Vide Fort St. George Gazette, dated 10th November 1942, page 685. Part I (Elementary Schools), and page 687, Part II (Secondary and High Schools).

Approved by the Director of Education, Ceylon, for use in Schools—Vide No. T.T.B.C. 5/43, dated 4th May, 1943.

136115
சென்னை-600 008.

முகவுரை

1939 ஆம் வருஷத்தில் அரசாங்கத்தார் வெளியிட்ட ஆரம்பப் பள்ளிக்கூடப் போதனைத் திட்டத்தையும், அந்தத் திட்டத்தை விளக்கும்பொருட்டு அவர்கள் 1940 ஆம் வருஷத்தில் வெளியிட்ட உபாத்தியாயர் குறிப்புக்களையும் வெகு ஜாக்கிரதையாகப் பின்பற்றி நாங்கள் சித்திர வாசகம் என்னும் வாசகத் தொடரை எழுதியிருக்கிறோம்.

இந்தப் புத்தகத்தில் காணப்படும் ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை இயற்றிய நெற்பானையும் எலியும், சைக்கிள், ஔவை என்னும் பாடல்களை அவர்களின் அனுமதியின் பேரிலும், ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி இயற்றிய பாப்பா பாட்டு என்னும் பாட்டைச் சென்னை பாரதிப் பிரசுராலயத்தாரின் அனுமதியின் பேரிலும், சித்திர வாசகம் முதல் மூன்று புத்தகங்களில் காணப்படும் பல பாட்டுக்களையும் கதைகளையும் அவற்றை எழுதிய ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமியின் அனுமதியின் பேரிலும் சேர்த்திருக்கிறோம்.

இவர்கள் யாவருக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனங்கள் உரியன.

ஆசிரியர்கள்

பொருள் அடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 APR 1947
MADRAS

		பக்கம்
1.	கிராமக் காட்சி	5
2.	குழந்தையும் மிட்டாயும்	6
3.	தகப்பனும் பையனும்	7
4.	பையன் பழக்கிய நாய்	8
5.	பாடம் 1. நெற்பானையும் எலியும் (சி. தேசிகவிநாயகம் பிள்ளை)	9
6.	பாடம் 2. எருது	11
7.	பாடம் 3. முதலையும் மாடும்	13
8.	பாடம் 4. கோழி...	17
9.	பாடம் 5.	21
10.	பாடம் 6. கோழியும் தோழிகளும்—I (பெ. நா. அப்புஸ்வாமி)	22
11.	பயிற்சி	26
12.	பாடம் 7. காலம்...	27
13.	பாடம் 8. கோழியும் தோழிகளும்—II (பெ. நா. அப்புஸ்வாமி)	29
14.	பயிற்சி	34
15.	பாடம் 9. மரங்கள்	35
16.	பாடம் 10. சர்க்கஸ் (சம்பாஷணை)	40
17.	பாடம் 11. இரக்கமுள்ள போர்வீரன்	44
18.	பாடம் 12. குடியானவனும் சித்திரக்குள்ளனும்	46
19.	பாடம் 13. சைக்கிள் (சி. தேசிகவிநாயகம் பிள்ளை)	51
20.	பாடம் 14. எருமை	52
21.	பாடம் 15. சாங்கோ பாஞ்சாவின் தீர்ப்பு (நாடகம்)	56

பக்கம்

22. பாடம் 16. அரசனும் வேலைக்காரனும் 61
23. பாடம் 17. "மறந்துவிட்டேன்!" 65
24. பயிற்சி 68
25. பாடம் 18. நாவல்பழம் 70
26. பயிற்சி 74
27. பாடம் 19. ரவீந்திரநாத் தாகுர் 75
28. பாடம் 20. ஔவை 78
29. பாடம் 21. ஔவை (சி. தேசிகவிநாயகம் பிள்ளை) 79
30. பாடம் 22. தைரியமுள்ள சிறுமி 80
31. பாடம் 23. கடிகாரம் எங்கே? 84
32. பயிற்சி 88
33. பாடம் 24. கொக்கின் கழுத்து—I 89
34. பயிற்சி 94
35. பாடம் 25. கொக்கின் கழுத்து—II 95
36. பாடம் 26. ஜாம்ஷட்ஜி நஸர்வான்ஜி டாட்டா ... 99
37. பயிற்சி 102
38. பாடம் 27. காகிதக் கூடை 103
39. பாப்பா பாட்டு (சி. சுப்பிரமணிய பாரதி)... ... 107
40. கொன்றைவேந்தன் 109
41. பழமொழிகள் 110
42. குறிப்புரை... 111

கிராமக் காட்சி



I. இந்தப் படத்தை நன்ருகப் பார்த்து, கேள்விகளை மௌன மாகப் படித்து, விடை எழுது:

1. மரத்தின் நிழலில் எத்தனைபேர் இருக்கிருர்கள்?
2. எத்தனை மாடுகள் நிற்கின்றன?
3. எத்தனை தென்னைமரங்கள் இருக்கின்றன?
4. ரஸ்தாவில் என்ன வண்டி போகிறது?

II. இந்தப் படத்தைப்பற்றிச் சொந்தமாக மூன்று வாக்கியங் கள் எழுது.

குழந்தையும் மிட்டாயும்



1



2



3



4



5

1. படங்களை வரிசையாகப் பார்த்து, கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

2. ஒவ்வொரு படத்தையும் பற்றி ஒரு வாக்கியம் எழுது.

தகப்பனும் பையனும்



1



3



2



4

1. படங்களை வரிசையாகப் பார்த்து, கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

2. ஒவ்வொரு படத்தையும் பற்றி ஒரு வாக்கியம் எழுது.

பையன் பழக்கிய நாய்



1

3

2



4

1. படங்களை வரிசையாகப் பார்த்து, கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

2. ஒவ்வொரு படத்தையும் பற்றி ஒரு வாக்கியம் எழுது.

பாடம் 1



நெற்பானையும் எலியும்

1. பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானையும் ஓர் புறம் ஓட்டையாமே.
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதுவே.

2. உள்ளே புகுந்து நெல் தின்று தின்று—வயி(று)
ஊதிப் புடைத்துப் பருத்ததுவே.
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதையோ.

3. பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியினைக் கண்டதுவே—ஓடிப்
போய் அதைக் கௌவியே கொன்றதுவே.

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

காலை = காலையில் எலியினை = எலியை

பழம்பானை	புடைத்து
சுண்டெலி	பருத்தது
புகுந்து	கௌவி

கேள்விகள்:

1. சுண்டெலி பானைக்குள் எப்படிப் புகுந்தது?
2. பானையின் உள்ளே புகுந்த சுண்டெலி என்ன செய்தது?
3. சுண்டெலியால் ஏன் வெளியே வர முடியவில்லை?
4. காலையில் பாட்டி என்ன செய்தாள்?
5. அப்பொழுது எலி என்ன செய்தது?
6. பிறகு என்ன நடந்தது?

1. இந்தப் பாட்டை மனப்பாடம் செய். பிறகு அதைச் சரியாக நடித்துச் சொல்.

2. நெல், கோதுமை, கம்பு, வரகு என்னும் நான்கும் தானியங்கள். வேறு தானியங்கள் எவற்றையாவது பார்த்திருக்கிறாயா? பார்த்திருந்தால் அவற்றின் பெயரைச் சொல்லு.

பாடம் 2



எருது

எருது மிகவும் உபயோகமான மிருகம். அஃது ஏர் உழும்; வண்டி இழுக்கும்; சுமை சுமக்கும்.

எருதின் பாதம் பிளந்திருக்கும்; கல்லைப்போல் கடினமாய் இருக்கும். அதற்குக் குளம்பு என்று பெயர். புல் மேய்வதற்கு எருது கரடு முரடான இடங்களில் வெகு தூரம் நடக்கவேண்டியதாயிருக்கும். குளம்புகள் கெட்டியாய் இல்லாவிட்டால் கால் தேய்ந்து புண்ணாய்ப் போகும். குளம்புகள் கெட்டியாய் இருப்பதால் அவை எளிதாய்த் தேய்ந்துபோவதில்லை.

எருதின் வாயிலே மேல்தாடையின் முன் பக்கத்தில் பல் கிடையாது. இறுகிய சதை மட்டிலும்தான் இருக்கும். அதன் பின் பக்கத்தில் பற்கள் இருக்கும். கீழ்த்தாடையின் முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் எருதுக்குப் பல் உண்டு.

எருது மேயும்போது புல்லைக் கறித்து உடனே விழுங்கிவிடும். பிறகு, விழுங்கிய புல்லை வாய்க்குக் கொண்டுவந்து, அசைபோட்டு, நன்ருக மென்று தின்னும்.

எருதை நாம் எப்பொழுதும் அன்பாக நடத்த வேண்டும்.

உழும்	இழுக்கும்	சுமக்கும்
பாதம்	குளம்பு	சதை

கடினமாய்	கரடு முரடான
கொண்டுவந்து	விழுங்கிவிடும்
அசைபோட்டு	கறித்து

கேள்விகள்:

1. எருதின் உபயோகம் என்ன?
2. எருதின் பாதத்தின் பெயர் என்ன?

பயிற்சி

இடதுபக்கத்தில் கொடுத்திருக்கும் சொற்களுக்கு ஏற்ற எதிர் மொழிகளை வலதுபக்கத்திலுள்ள சொற்களிலிருந்து பொறுக்கி எழுது:

முன்	வெளியே
கீழ்	பின்
உள்ளே	மேல்

பாடம் 3

முதலையும் மாடும்

திருவாங்கூர் ராஜ்யத்திலே ஆலப்புழை, கொல்லம் என்ற இரண்டு ஊர்கள் இருக்கின்றன. இவ்விரண்டு ஊர்களுக்கும் இடையே பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. அதற்கு அரிப்பாட்டுக் காயல் என்று பெயர். அந்த ஏரியின் வழியாகப் படகுகளும் தோணிகளும் போய்க்கொண்டே யிருக்கும்.

அந்த ஏரியின் பக்கத்திலுள்ள இடமெல்லாம் செழிப்பான இடம்; எங்கே பார்த்தாலும் தென்னை மரம் வளர்ந்திருக்கும். ஓர் ஆள் உயரம் முதல் பத்தாள் உயரம் வரையிலும் தென்னைமரங்கள் வளர்ந்து நிற்கும். அனேகமாக எல்லாத் தென்னைமரங்களும் பந்தலின் கால்களைப்போல் நேராக இருக்கும். ஒன்றிரண்டு தென்னைமரங்கள் மட்டும் சாய்ந்திருக்கும். ஒவ்வொரு மரத்திலும் தேங்காய்கள் குலைகுலையாய்க் காய்த்துத் தொங்கும். கீழே புல் பச்சைப்பசே லென்று இருக்கும்.

அந்த ஏரி மிகவும் ஆழமானது. அதிலே முதலைகள் உண்டு. ஏரியிலுள்ள மீன்களையும் கரையிலுள்ள ஆடு மாடு கோழிகளையும் முதலைகள் பிடித்துத் தின்னும்.

முதலைகளுக்குத் தேங்காயின்மேலும் வெகு இஷ்டம். சில வேளைகளில் அவை ஏரியை விட்டுக் கரைக்கு வரும். சாய்வான தென்னைமரத்தின்மேல் ஏறித் தேங்காயைப் பறித்துத் தின்னும்.

அரிப்பாட்டுக் காயலின் பக்கத்திலுள்ள குடியானவன் ஒருவன் தன் பசுமாட்டைத் தென்னைமரத்தில் கட்டிப் புல்மேய விட்டிருந்தான். கயிறு நீளமாக இருந்தபடியால், பசுமாடு இங்குமங்கும் நடந்து புல் மேய்ந்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு முதலை தேங்காய் தின்னக் கரைக்கு வந்தது. தென்னைமரத்தில் மெல்ல மெல்ல ஏற ஆரம்பித்தது. அது பசுமாட்டைப் பார்க்கவில்லை. பசுமாடும் முதலையைப் பார்க்கவில்லை.

சற்று நேரம் கழித்து, முதலையின்மேல் பட்ட காற்று பசுமாட்டின்மேல் பட்டது. முதலையின் வாடை பசுமாட்டுக்கு எட்டிற்று. அப்போது மாடு பயந்துபோய்க் கத்திற்று. கயிற்றை இழுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது. கயிறு தென்னைமரத்தில் கட்டப்பட்டிருந்ததால் மாடு ஓடிப்போக முடியவில்லை. தென்னைமரத்தைச் சுற்றிச் சுற்றி அது ஓடிற்று.

அப்படி மாடு சுற்றி ஓடும்போது மாட்டைக் கட்டிய கயிறு தென்னைமரத்தில் சுற்றிக்கொள்ள ஆரம்பித்தது. கயிற்றின் முதல் சுற்று முதலையின் வாலையும் சேர்த்துச் சுற்றிற்று. இரண்டாம் சுற்று முதலையின் வயிற்றுப் பக்கத்தில் விழுந்தது. மூன்றும் சுற்று முதலையின் நெஞ்சுப்புறத்தில் விழுந்தது. சுற்று விழ விழ, முதலை மரத்தோடு வரிந்து கட்டப்பட்டது.

ஆனால் கயிறு சுற்றச் சுற்றக் கயிற்றின் நீளம் குறைந்தது. பசுமாடும் வரவரத் தென்னைமரத்தின் கிட்ட வரவேண்டியதாயிற்று. முதலையைப் பார்த்த பசுமாடு முதலைதான் தன்னை இழுக்கிறது என்று பயந்து கதறிற்று.

ஆதலால் வேகமாக இழுத்துக்கொண்டு ஓட முயன்றது. அப்போது அடுத்த சுற்று முதலையின் கழுத்தில் விழுந்தது. ஆகையால் முதலையால் அசையவும் திரும்பவும் முடியவில்லை. அது மூச்சுத் திணறித் திண்டாடியது.

மாட்டின் குரலைக்கேட்ட குடியானவனும் அவனுடைய சினேகிதர்களும் தடிகளை எடுத்துக்கொண்டு ஓட்டமாய் ஓடிவந்தார்கள்.

முதலில் அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அப்புறம் மரத்தில் கட்டப்பட்டுத் திண்டாடிக்கொண்டிருந்த முதலையைப் பார்த்தார்கள். "அங்கேயா இருக்கிறாய் நீ? அகப்பட்டுக்கொண்டாயா? எத்தனை ஆட்டையும் மாட்டையும் தின்று கொழுத்துக் கிடக்கிறாய்? கண்ணைப் பார் கண்ணை! வாலைப் பார் வாலை! உனக்குத்

தேங்காய் வேறு வேண்டுமா?" என்று சொல்லி, கம்பா லும் கட்டையாலும் அந்த முதலையை அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

ராஜ்யம்	வாடை	பச்சைப்பசேல்
செழிப்பான	விழுவிழ	குடியானவன்
நேராக	கத்திற்று	மெல்லமெல்ல
குலைகுலையாக	ஏரி	சுற்றிச்சுற்றி
ஏறி	ஒன்றிரண்டு	வரவர
இங்குமங்கும்	சாய்ந்து	கதறிற்று

கேள்விகள்:

1. குடியானவன் மாட்டை எங்கே கட்டியிருந்தான்?
2. முதலை ஏன் கரைக்கு வந்தது?
3. முதலையின் வாடை பட்ட மாடு என்ன செய்தது?
4. ஓடிவந்த குடியானவர்கள் என்ன செய்தார்கள்?

பயிற்சி

1. முதலை கரைக்கு
2. முதலை வந்தது.

முதல் வரியில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. ஆனால் பொருள் முடியவில்லை.

இரண்டாவது வரியிலும் இரண்டு சொற்கள் இருக்கின்றன. ஆனால் இதில் பொருள் முடிந்துவிட்டது. இதற்கு வாக்கியம் என்பது பெயர்.

வாக்கியத்தின் முடிவில் பொருள் முடிந்துவிட்டது என்று காட்ட ஒரு புள்ளி (.) இடுகிறோம். இதற்கு முற்றுப் புள்ளி என்பது பெயர்.

கீழுள்ளவற்றை மௌனமாய்ப் படி. வாக்கியங்களை மட்டி லும் பொறுக்கி எழுதி, முற்றுப்புள்ளி இடு:

1. ஊர்கள் இருக்கின்றன
2. தேங்காயைப் பறித்து
3. முதலைகள் உண்டு
4. ஏரி இருக்கிறது

பாடம் 4

கோழி

இக்காலத்திலே வீட்டில் வளரும் கோழிகள் மிக மிகப் பழமையான காலத்தில் காட்டுக்கோழிகளாய் இருந்தன. கோழிகளுக்குச் சிறகுகள் இருந்தபோதிலும், மற்றப் பறவைகளைப்போல், அவை அதிக தூரமாவது, உயரமாவது பறப்பதில்லை. ஆனால் கொஞ்சதூரம் அவற்றால் பறக்கமுடியும். கோழிகள் பறந்து, வீட்டுக் கூரைகளின்மேல் உட்காருவதை நாம் எல்லோரும் பார்த்திருப்போம்.

கோழிகளின் கால்களில் முன்புறமாக மூன்று நீள மான விரல்கள் இருக்கும்; பின்புறமாகக் குட்டையான விரல் ஒன்றிருக்கும். முன் விரல் களிலே பலமுள்ள நகங்கள் இருக் கும். இவற்றால் கோழி நிலத் தைக் கிளறும். கோழியின் அலகு நீண்டும் கூர்மையாயும் இருக்கும். அலகினால் அது நிலத்தைக் கொத்தி அங்கே கிடைக்கும் உணவைப் பொறுக்கி உண்ணும்.



கோழி மற்றப் பறவைகளைப்போல் தண்ணீரில் குளிப்பதில்லை. அதற்குப் பதிலாக, நிலத்தைக் கீறிப் புழுதியாக்கி, அந்தப் புழுதியைத் தன் உடலின்மே லெல்லாம் இறைத்துக்கொள்ளும்.

சேவல் அழகிய பக்ஷி. ஆனால் அதற்குச் சண்டையிடுவதில் வெகு பிரியம். ஒரு சேவல் இருக்கும் இடத்தில் வேறொரு சேவல் வந்துவிட்டால், உடனே இரண்டுக்கும் சண்டை வந்துவிடும். அவை தலையைக் குனிந்துகொண்டு ஒன்றை ஒன்று நெருங்கும். அவற்றின் கழுத்துப்புறத்து மயிர் சிலிர்க்கும். இரண்டும் சிறிது நேரம் ஒன்றை ஒன்று உற்றுப் பார்க்கும். பிறகு திடீரென்று இரண்டும் ஒன்றின்மேல் ஒன்று பாய்ந்து, கடுமையாய்ச் சண்டையிடும். அவற்றுள் ஒன்று பயந்து ஓடும்வரையிலோ, அல்லது காயப்பட்டுச் சாகும் வரையிலோ சண்டையிடுவது தான் அவற்றின் வழக்கம். காலின் பின்புறம் உள்ள குட்டையான விரல் சண்டையிடும்போது கத்தியைப்போல் உதவுகிறது.

சேவல் சிற்சில குறிப்பிட்ட வேளைகளில் தலையை நிமிர்த்திக்கொண்டு கூவும். சேவல் கூவுவதைக்கொண்டு, உத்தேசமாக, மணி தெரிந்துகொள்ள முடிகிறது.

பெட்டைக்கோழி முட்டை யிட்டவுடன் கொக்கரிக்கும். உணவு உண்ணக் குஞ்சுகளை அழைப்பதற்கு அது மெதுவாகக் கத்தும்.

பெட்டைக்கோழி தன் குஞ்சுகளை நன்ருகப் பாது காக்கும். சாதாரணமாக அது பயந்த சுபாவம் உடையதாய் இருந்தபோதிலும், தன்னுடைய குஞ்சுகளைக் கடிக்கவரும் நாய் முதலியவற்றை அது எதிர்த்துத் தாக்கும். ஏதாவது அபாயம் நேரிடும்போலிருந்தால், அது 'கொக், கொக்' என்று கூவித் தன் குஞ்சுகளை அழைக்கும். இந்தக் குரலைக் கேட்டதும் குஞ்சுகள் எல்லாம் ஓடிவந்து, அதன் சிறகுக்கு அடியில் ஒதுங்கிக் கொள்ளும். அக்குஞ்சுகளைப் பெட்டைக்கோழி தன்னுடைய சிறகுகளால் அணைத்துக் காப்பாற்றும்.

பெட்டைக்கோழி முட்டைகளின்மேல் உட்கார்ந்து அடைகாக்கும். அவற்றை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும். அப்போது இரை தின்பதற்குக்கூட அது கூட்டை விட்டு எளிதில் வெளியே வராது.



அடைகாக்கத் தொடங்கி ஏறக்குறைய மூன்று வாரங்களில் முட்டை பொரித்துக் குஞ்சுகள் வெளியே வரும். முட்டையினின்று வெளியே வந்த உடனேயே கோழிக் குஞ்சுகள் நடக்கவும், ஓடவும் தொடங்கிவிடும். எப்படி இரை பொறுக்குவது என்பதைத் தாய்க்கோழி தன் குஞ்சுகளுக்குக் கற்றுக்கொடுக்கும்.

கோழிமுட்டை நல்ல உணவு. அதைப் பல வகையாய்ப் பக்குவப்படுத்தி உண்கிறுர்கள். அனேகம் தின்பண்டங்களைச் செய்வதற்கும் கோழிமுட்டையை உபயோகிக்கிறுர்கள்.

கிளறும்	பொறுக்கி	புழுதி
சிலிர்க்கும்	கடுமையாய்	உதவுகிறது
உத்தேசமாக	சுபாவம்	எதிர்த்து
சாதாரணமாக	அணைத்து	அடைகாக்கும்
தாக்கும்	பக்குவப்படுத்தி	தின்பண்டங்கள்

கேள்விகள்:

1. கோழியின் காலின் முன்புறத்தில் எத்தனை விரல்கள் உண்டு?

2. கோழி தன்னுடைய விரல் நகங்களால் என்ன செய்யும்?

3. கோழி தன்னுடைய அலகினுல் என்ன செய்யும்?

4. அபாயம் நேரிடும்போலிருந்தால் கோழி என்ன செய்யும்? அப்போது அதன் குஞ்சுகள் என்ன செய்யும்?

பயிற்சி

இடதுபக்கத்தில் கொடுத்திருக்கும் சொற்களுக்கு ஏற்ற எதிர் மொழிகளை வலதுபக்கத்திலுள்ள சொற்களிலிருந்து பொறுக்கி எழுது:

அதிகம்	நிமிர்ந்து
முன்புறம்	குட்டையான
உரக்க	கொஞ்சம்
நீளமான	பின்புறம்
குனிந்து	மெதுவாக

பாடம் 5

1. கீழ்க்கண்ட சொற்களிலிருந்து ஏற்ற சொல்லைக் கோடிட்ட இடங்களில் அமைத்துக் கதையைச் சுருக்கமாக எழுது:

பூனை   பாட்டி
வெளியில்   தின்றது

நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டில் ஒரு ஓட்டைப் பானை இருந்தது. சுண்டெலி அதற்கு உள்ளே போய் நெல் ———. சுண்டெலி நெல்லைத் தின்றதால் அதன் வயிறு பருத்துப் போயிற்று. ஓட்டை வழியாக அது ——— வர முடியவில்லை.

காலையில் ——— பானையைத் திறந்தாள். குதித்து ஓடின எலியைப் ——— பிடித்துக் கொன்றது.

2. கோடிட்ட இடங்களில் கீழ்க்கண்ட சொற்களிலிருந்து ஏற்ற சொல்லை அமைத்துக் கதையைச் சுருக்கமாக எழுது:

தென்னை   கயிறு   ஏறிற்று   குடியானவன்
இழுத்துக்கொண்டு   ஓடிற்று   சினேகிதர்களும்

முதலையும் மாடும்

அரிப்பாட்டுக் காயல் என்னும் ஏரியிலே முதலைகள் உண்டு. ஏரியின் பக்கத்திலே சாய்ந்த ——— மரம் ஒன்று இருந்தது. அதிலே ——— பசுமாட்டைக் கட்டிப் புல் மேய விட்டிருந்தான். ஏரியிலிருந்து ஒரு முதலை கரைக்கு வந்து தென்னைமரத்தில் ———.

முதலையின் வாடை பட்ட பசுமாடு கயிற்றை ——— தென்னைமரத்தைச் சுற்றி ———. மாட்டைக் கட்டிய ——— முதலையை மரத்தோடு வரிந்து கட்டிற்று.

முதலையைக் கண்ட மாடு பயந்து கதறிற்று. மாட்டின் குரலைக் கேட்ட குடியானவனும் அவனுடைய ——— ஓடி வந்து முதலையைக் கொன்றுவிட்டார்கள்.

பாடம் 6



கோழியும் தோழிகளும்—1

1. செக்கச் சிவந்த சிறு கோழி
   தின்ன ஏதோ கிடைக்கு மென்று
   'கொக் கொக்' என்று கூவிக் கொண்டு
   குப்பை மேட்டைக் கிளறிற்றும்.

2. அப்போ தந்த மேட்டினிலே
அதற்குக் கிடைத்த நெல்லொன்றைக்
கப்பென் றுடனே விழுங்காமல்
கணக்குப் போட்டுப் பார்த்ததுவே.

3. "இந்த நெல்லை விதைத்திட்டால்
எத்தனை நெற்கள் கிடைத்துவிடும்!
சொந்த நண்பர் பலரோடும்
சுகமாய் இருந்து சாப்பிடலாம்."

4. என்றே எண்ணி அக்கோழி
இரைந்து கூவி அழைத்ததுவே.
"பன்றி, நாயே, காக்கையே,
பச்சைக் கிளியே, கழுதையே,

5. கொக்கே, வாத்தே, பூனையே,
குருவி, மயிலே வாருங்கள்"
'கொக் கொக்' என்று கூவி அக்
கோழி தன் நண்பரை அழைத்ததுவே.

6. எல்லா நண்பரும் ஓடி வந்து
"என்ன செய்தி?" என்றூர்கள்.
"நெல்லின் விதையை விதைத்திட்டால்
நீங்களும் நானும் சாப்பிடலாம்."

7. என்று கோழி சொன்ன வுடன்
எல்லா நண்பரும் ஒன்று போல,
"நன்று, நன்று, நீ உடனே
நட்டிடு விதையை" என்றூர்கள்.

8. "நெல்லின் விதையை நடுவதற்கு
நிலத்தை நன்ருய் உழவேண்டும்.
சொல்லுங்கள் யார் உங்களிலே
சுறுக்காய் நிலத்தை உழுவார்கள்?

9. "உழுத நிலத்தில் உங்களில் யார்
ஊன்றி விதையை நடுவார்கள்?"
கழுதை "மாட்டேன்" என்றதுவே;
காக்கை "மாட்டேன்" என்றதுவே;

10. நாயும், பூனையும், பன்றியுமே
"நாங்கள் மாட்டோம், வேலையில்லை
தாயும் குஞ்சும் நீங்களெல்லாம்
தாமே நடுங்கள்" என்றனவே.

11. என்று மறுத்த நண்ப ரெல்லாம்
'ஈ' 'ஈ' என்று சிரித்து விட்டு
"நன்ருய் அழைத்தாய், கோழி, நீ.
நாணமில்லை உனக்"கென்ருர்.

12. "நானே விதைப்பேன் இவ்விதையை
நானே தண்ணீர் வார்த்திடுவேன்.
நானே வளர்ப்பேன் நெற்பயிரை.
நன்ருய் நாற்றைக் காத்திடுவேன்.

13. "நீங்கள் போங்கள் எல்லாரும்
நேச மில்லா நண்பர்களே!
நாங்கள் தாயும் குஞ்சுகளும்
நன்ருய் நெல்லைப் பயிர் செய்வோம்."

14. என்று கோழி சொல்லியதும்
இஷ்டம் அற்ற நண்பர்களும்
ஒன்ருய் எழுந்து போனுர்கள்
"உழவே மாட்டோம்" என்றவர்கள்.

15. நட்ட விதையும் முளேத் தெழுந்து
நன்ருய்க் காய்த்து முதிர்ந்ததுவே.
கிட்டத் தட்டப் பதக்கு நெல்
கிடைக்கு மென்று தோன்றிற்றே.

—அப்புஸ்வாமி

செக்கச்சிவந்த	முதிர்ந்து	நேசம்
கணக்குப்போட்டு	வாருங்கள்	கிட்டத்தட்ட
காணம்	குப்பை மேடு	பதக்கு
இஷ்டம்	சுறுக்காய்	போங்கள்

பயிற்சி

கவனி:

ஒன்று	பல
நெல்	நெற்கள்
நீ	நீங்கள்
நான்	நாங்கள்

1. இந்தப் பாடத்தில் வரும் சில பறவைகளின் பெயர்களை எழுது.

2. இந்தப் பாடத்தில் வரும் சில மிருகங்களின் பெயர்களை எழுது.

3. இந்தப் பாடத்தில் வரும் சில பொருள்களின் பெயர்களை எழுது.

கோழி, மயில் இவை பறவைகளின் பெயர்கள்.
பூனை, கழுதை இவை மிருகங்களின் பெயர்கள்.
மேடு, நிலம் இவை இடத்தின் பெயர்கள்.
சிறகு, அலகு இவை உடலின் பாகத்தின் பெயர்கள்.
தூரம், உயரம் இவை அளவுபற்றிய பெயர்கள்.
பகல், இரவு இவை காலத்தின் பெயர்கள்.

பெயர்களைக் காட்டும் சொற்களுக்குப் பெயர்ச்சொற்கள் என்பது பெயர்.

4. கீழ்க்கண்ட சொற்களில் உள்ள பெயர்ச்சொற்களை மட்டிலும் பொறுக்கி எழுது:

பேடு	அந்த	பூனை	என்றன
வீடு	பறந்து	புல்	வேகமாய்

பாடம் 7

காலம்

பூமியானது பம்பரத்தைப்போல் சுற்றிக்கொண்டே இருக்கிறது. அது ஒரு முறை தன்னைத்தானே சுற்றுவதற்கு ஆகும் காலத்தைத்தான் நாம் நாள் என்று சொல்லுகிறோம்.

செக்கு மாடு செக்கைச் சுற்றிச் சுற்றி நடந்து கொண்டே இருப்பதுபோலப் பூமியைச் சுற்றிச் சுற்றிச் சந்திரன் ஓடிக்கொண்டே இருக்கிறது. பூமியைச்சுற்றிச் சந்திரன் ஒருமுறை ஓடி முடிக்கும் காலம் கிட்டத்தட்ட ஒரு மாதம்.

சந்திரன் பூமியைச் சுற்றி வருவதுபோலவே பூமியும் சூரியனைச் சுற்றி வருகிறது. பூமி சூரியனை ஒருமுறை சுற்றுவதற்கு முந்நூற்று அறுபத்து ஐந்து

நாட்கள் ஆகின்றன. இந்தக் காலத்தைத்தான் வருஷம் என்கிறோம்.

வருஷத்திலே பன்னிரண்டு மாதங்கள் உண்டு. ஜனவரி, பெப்பிரவரி, மார்ச்சு, ஏப்பிரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட்டு, ஸெப்ட்டெம்பர், அக்ட்டோபர், நவெம்பர், டிஸெம்பர் என்பவை இங்கிலீஷ் மாதங்கள்.

இருபத்துநாலு மணி நேரம் கொண்டது ஒரு நாள். அறுபது நிமிஷம் கொண்டது ஒரு மணி. அறுபது ஸெக்கண்டு கொண்டது ஒரு நிமிஷம்.

இரவிலும் பகலிலும் மணி என்ன என்பதைக் கடியாரங்கள் காட்டுகின்றன. அவற்றைப் பார்த்து மணி தெரிந்துகொள்ளலாம்.

ஒருமுறை	ஸெக்கண்டு	மாதங்கள்
நாள்	இரவு	நிமிஷம்
மாதம்	வருஷம்	கடியாரம்
மணி	நாட்கள்	பகல்

கேள்விகள்:

1. நாள் என்றால் என்ன?
2. வருஷம் என்றால் என்ன?
3. மாதங்களின் பெயர்களை எழுது.

பயிற்சி

இந்தப் பாடத்திலிருந்து ஆறு பெயர்ச்சொற்களை எடுத்து எழுது.

பாடம் 8



கோழியும் தோழிகளும்—II

1. அறுத்த கதிரை உதிர்த்திட்டு,
அளந்து பார்த்துக் கணக்கிட்டு,
மறுத்த நண்பர்களை மீண்டும்
வர வழைத்த தக்கோழி.

2. "நெல்லை விதைத்தேன், கதிர் கொய்தேன்,
நெல்லை உதிர்த்து அளந்திட்டேன்.
நெல்லைக் குத்திப் புடைத்திடுவோம்.
நீங்களும் நானும் சாப்பிடலாம்.

3. "நல்ல உலக்கை தருகிறேன்.
நாலு முறமும் தருகிறேன்.
உள்ள நெல்லைச் சீக்கிரமாய்
உங்களில் குத்துவோர் யாரம்மா?

4. "குத்திய நெல்லை உங்களில் யார்
கொழித்துப் புடைப்பார்?" என்றலுமே,
கத்தின யாவும் ஒன்றாகக்
"கையை அசையோம் நாங்களெல்லாம்.

5. தாண மின்றி எங்களை நீ
நன்ருய் வேலைக் கழைத்தாய் போ.
கோணல் மூக்குக் குஞ்சுகளைக்
குத்திப் புடைக்கச் சொல்" எனவே,

6. "நானே நெல்லைக் குத்திடுவேன்.
நானே நெல்லைப் புடைத்திடுவேன்.
நானே கொழித்து எடுத்திடுவேன்.
நானே உமியைப் போக்கிடுவேன்.

7. "நீங்கள் போங்கள் எல்லாரும்
நேச மில்லா நண்பர்களே!
நாங்கள் தாயும் குஞ்சுகளும்
நன்ருய் அரிசி ஆக்கிடுவோம்."

8. என்று கோழி சொல்லியதும்,
இஷ்டம் அற்ற நண்பர்களும்
ஒன்ருய் எழுந்து போனுர்கள்
உலக்கை பிடிக்க மறுத்தவர்கள்.

9. சமையல் எல்லாம் செய்துவிட்டுச்
சட்டிச் சோற்றையும் படைத்துவிட்டுத்
"தமக்கைமார்களே வாருங்கள்;
தாய்மாரெல்லாம் வாருங்கள்."

10. என்று கோழி கூவியதும்
எல்லா நண்பரும் ஓடிவந்தார்.
"நன்ருய்த் தின்போம் இப்போது
நல்ல உணவை ருசியுடனே."

11. என்று எண்ணி அவர்களெல்லாம்
இரைக்க இரைக்க ஓடிவந்தார்.
"இன்று நமது அதிர்ஷ்டம்போல்
என்றும் இல்லை" என்றனரே.

12. கோழியின் வீட்டின் வாசலிலே
கொக்கு முதலிய வந்தவுடன்,
"தோழிய ரெல்லாம் வாருங்கள்;
சோற்றை நிரம்ப உண்ணுங்கள்."

13. என்று கோழி அழைத்திடவே,
எல்லா அந்த நண்பர்களும்
"நன்று, சோற்றைப் படைத்திடு நீ;
நாங்கள் உண்போம்" என்ருர்கள்.

14. "அருமை மிக்க தோழியரே,
ஆசையோடு அழைத்த எனை
பெருமைப் படுத்த வந்தீர்கள்;
பெரிதும் மகிழ்ச்சி கொண்டிட்டேன்.

15. "கோணல் மூக்குக் குஞ்சுகளைக்
கூட அருகில் உட்கார்த்தி,
நாண மில்லா நானுமே
நன்ருய் இருந்து சாப்பிடுவேன்.

16. "நீங்கள் எல்லாம் அண்டையிலே
நின்று சும்மா இருந்திடுவீர்;
நாங்கள் சோறு தின்பதை நீர்
நன்ருய்க் கண்டு களித்திடுவீர்."

17. என்று கோழி சொல்லியதும்
இஷ்டம் அற்ற நண்பர்களும்
"நன்ருய்ச் சொன்னுய் கோழி நீ!
நாங்கள் சும்மா இருப்போமா?"

18. என்று தோழியர் சொன்னவுடன்
'ஈ' எனச் சிரித்த தக்கோழி.
நன்ருய்க் கதவைத் தாழிட்டு,
நாதாங்கியும் போட்டதுவே.

19. "வேலை என்ருல் மாட்டீர்கள்
வெட்கம் கெட்ட தோழியரே!
மேலை நாளில் நடந்தவெல்லாம்
மீட்டும் நினைத்துப் பாருங்கள்.

20. "உண்ணுவோம் சோற்றை நாம் என்று
ஓடி வந்த பாங்கிகளே!
கண்ணுக்கு முன்னே நில்லாமல்
காலை நீட்டி நடவுங்கள்."

21. என்று கோழி சீறலுமே,
இஷ்டம் அற்ற நண்பர்களும்
ஒன்ருய் எழுந்து போகும்போ(து)
ஊரில் உள்ளோர் சிரித்தார்கள்.

22. செக்கச் சிவந்த கோழியும் அச்
சின்னஞ் சிறிய குஞ்சுகளும்
'கொக் கொக்' என்று கூவிக்கொண்டு
கூடி இருந்து உண்டனவே.

—அப்புஸ்வாமி

மீண்டும்	இஷ்டமற்ற	நேசமில்லா
இரைக்க இரைக்க	வரவழைத்து	மறுத்த
சாப்பிடு	அதிர்ஷ்டம்	நிரம்ப
நாதாங்கி	உண்	தின்னு
பாங்கி	வெட்கம்	தோழி
உணவு	நாணம்	சோறு
கதிர்	அண்டை	அருகு

பயிற்சி

1. கீழுள்ள சொற்களுக்கு ஈடான மறு பதங்களை எழுது:

சாப்பிடு	நாணம்	பாக்கி
சோறு	அருகு	இஷ்டமறற

2. கோடிட்ட இடங்களில் கீழ்க்கண்ட சொற்களிலிருந்து ஏற்ற சொல்லை அமைத்துக் கதையைச் சுருக்கமாக எழுது:

நெல்	நண்பர்கள்
உழுது	அழைத்தது
செய்யவில்லை	தானாகவே
குஞ்சுகளுமாக	நண்பர்களை

கோழியும் குஞ்சுகளும்

கோழிக்கு ஒரு ——— கிடைத்தது. அந்த நெல்லை விதைக்க, அது பன்றி முதலிய நண்பர்களை அழைத்தது. அந்த ——— உதவி செய்யவில்லை. கோழி தானாகவே நிலத்தை ———, நெல்லை விதைத்தது.

நெல் முளைத்துப் பயிராகிக் காய்த்து முதிர்ந்தது. மறுபடியும் கோழி தன் நண்பர்களை உதவிக்கு ———. ஒருவரும் உதவி செய்யவில்லை. கோழி தானாகவே கதிர் அறுத்து, உதிர்த்து, அளந்து பார்த்தது.

அதிகம் நெல் கிடைத்தது. மறுபடியும் கோழி தன் நண்பர்களை உதவிக்கு அழைத்தது. அவர்கள் உதவி ———. கோழி ——— நெல்லைப் புடைத்துக்கொழித்துச் சோறாக்கிற்று. மறுபடியும் கோழி ——— அழைத்தது. எல்லா நண்பர்களும் சாப்பிட ஓடிவந்தார்கள். அவர்களுக்குக் கொடுக்காமல் கோழியும் ——— உணவை உண்டன.

பாடம் 9

மரங்கள்

மரங்களுக்கு உயிர் உண்டு. அவை அழகு மிகுந்தவை; பயனுள்ளவை. மனிதர்களும் மிருகங்களும் வெயிலுக்கும் மழைக்கும் மரங்களின் அடியிலே ஒதுங்குவதுண்டு. மரத்தின் நிழலில் வெயில் அதிகமாய்த் தோன்ருது.



பலவகைப் பிராணிகளுக்கு மரங்கள் இருப்பிடம். மரக்கிளைகளிலே சில பறவைகள் கூடு கட்டுகின்றன; வேறு சில அவற்றில் தங்கி இளைப்பாறி உறங்குகின்றன. மரத்தின் மேலும், மரப்பொந்துகளிலும், மரத்தின் அடியிலும் பலவகைப் பிராணிகள் வாழ்கின்றன.

நமது வீடுகளிலுள்ள சாமான்களில் பல மரத்திஞல் செய்யப்பட்டவை. மா, கொய்யா, வாழை முதலிய மரங்கள் தரும் பழங்களை நாம் தின்கிருேம். தென்னை இலுப்பை, ஆமணக்கு, வேம்பு முதலியவை தரும் காய்களிலிருந்து நாம் எண்ணெய் எடுக்கிருேம். வாதுமை, கமுகு, முந்திரி முதலிய மரங்களின் கொட்டைகளை நாம் பலவகையாய் உபயோகிக்கிருேம்.

உடை, சவுக்கு, வேம்பு முதலிய மரங்களிலிருந்தும், பலவகைக் காட்டு மரங்களிலிருந்தும்

நமக்கு விறகும் கரியும் கிடைக்கின்றன. நாற்காலி, மேஜை, கதவு, ஜன்னல் முதலியவற்றைச் செய்வதற்கும் வீடு கட்டும் உத்தரங்களைச் செய்வதற்கும் தேக்குமரம் உபயோகப்படுகிறது. தேக்குமரத்தைக் கறையான்



அரிப்பதில்லை. தேக்குமரம் உயர்ந்த ஜாதி மரமாகக் கருதப்படுகிறது. தேக்குமரத்திற்கு விலை அதிகம். ஆதலால் ஏழைகள் வீடு கட்டத் தேக்கு மரத்தை அதிகமாய் உபயோகிப்பதில்லை. வேம்பு, புளி, மா, பனை முதலியவற்றையே ஏழைகள் வீடு கட்ட உபயோகிக்கிறார்கள்.

காகிதம் செய்வதற்கும் சில மரங்கள் உதவுகின்றன:

தென்னை, பனை, ஈந்து, கமுகு போன்ற சில மரங்கள் கிளைகளின்றி உயர்ந்து வளர்கின்றன. மா முதலிய

வேறு சிலவகை மரங்கள் கொப்பும் கிளையுமாகத் தழைத்து, விரிந்து வளர்கின்றன.

பெரிய மரங்களின் வேர்கள் பூமிக்குள்ளே ஆழமாகச் செல்லுகின்றன. நிலத்திலிருந்து நீரை உறிஞ்சுவதற்கும், மரம் கீழே விழாமல் நிறுத்துவதற்கும் வேர்கள் உதவுகின்றன.

ஆலமரத்துக்கு வேர்களைத் தவிர விழுதுகளும் உண்டு. இவை கிளைகளிலிருந்து பூமியை நோக்கி



வளரும் வேர்கள். பூமியில் இறங்கியதும் இவை ஆழ மாகப் பதிந்து நிலைத்துவிடுகின்றன. இவ்வாறு சில ஆலமரங்கள் மிகப் பெரியவையாய் வளருகின்றன. நூற்றுக்கணக்கான ஆட்கள் அவற்றின் அடியிலே சௌகரியமாகத் தங்க முடியும்.

இலவமரத்தின் கிளைகள் மற்ற மரக்கிளைகளைப் போல் இருப்பதில்லை. அம்மரத்துக்குக் கிளைகளும் அதிகம் கிடையா.

சந்தனமரம் மிகவும் வாசனை உள்ளது. சந்தனக் கட்டையைச் சந்தனக்கல்லில் அரைக்கும்போது கிடைக் கும் பொருள்தான் நாம் சந்தனம் என்று கொண்டாடும் வாசனைப்பொருள்.

வெயில்	உயிர்ப் பிராணிகள்
இருப்பிடம்	இளைப்பாறி
உத்தரம்	உறிஞ்சு
விழுது	சௌகரியமாக

கேள்விகள்:

1. வாழைமரத்தினால் நமக்கு என்ன உபயோகம்?
2. தேக்குமரம் நமக்கு எப்படிப் பயன்படுகிறது?
3. கிளைகள் இல்லாத சில மரங்களைச் சொல்லு.
4. வேரினால் மரத்துக்கு என்ன உபயோகம்?

பயிற்சி

நாய் ஓடுகிறது.

இது ஒரு வாக்கியம். ஏனென்றால் இதில் பொருள் முடிந்திருக்கிறது. இதிலே நாய் என்பது பெயர்ச்சொல். ஏனென்றால் அது ஒரு மிருகத்தின் பெயர். நாய் என்ன செய்கிறது?

ஓடுகிறது என்பது நாயின் செயலைக் காட்டும் சொல். செயல் என்பதை வினை என்றும் சொல்லலாம். ஆகையால் ஓடுகிறது என்பது வினையைக் காட்டும் சொல். ஆதலால் அதை வினைச்சொல் என்று சொல்லுகிறார்கள்.

பிராணிகள் வாழ்கின்றன.

பிராணிகள் என்ன செய்கின்றன? வாழ்கின்றன. ஆகையால் இந்த வாக்கியத்தில் வாழ்கின்றன என்பது வினைச்சொல்.

கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களைச் சொல்லு:

1. மரங்கள் வளர்கின்றன.
2. பூமி சுற்றுகிறது.
3. நாங்கள் உண்போம்.
4. நீங்கள் நடவுங்கள்.

பாடம் 10



சர்க்கஸ்

சம்பாஷணை

ராமன்: நீ நேற்று சர்க்கஸுக்கு வந்திருந்தாயா?

கோபாலன்: நான் என் மாமா வீட்டுக்குப்போயிருந்தேன். இன்று காலையில்தான் வந்தேன். சர்க்கஸ் நன்ருய் இருந்ததா?

ராமன்: நன்ருய் இருந்தது. சிங்க விளையாட்டு மிகவும் நன்ருய் இருந்தது. நீ சிங்கம் பார்த்திருக்கிருயா?

கோபாலன்: போன வருஷம் சர்க்கஸ் வந்தது. பகலில் கூடாரத்திற்கு வெளியே கூடுகளை வைத்திருந்தார்கள். ஒரு கூட்டிலே சிங்கம் இருந்தது. அதைப் பார்க்க எனக்குப் பயமாய் இருந்தது. நான் கிட்டப் போகவில்லை.

ராமன்: நேற்று சர்க்கஸ்காரன் சிங்கக் கூட்டுக்குள்ளேயே போய்விட்டான். அது பெரிய கூடு. அதிலே ஆறு சிங்கங்கள் இருந்தன. அவன் கையிலே ஒரே ஒரு சவுக்குத்தான் இருந்தது; வேருென்றும் இல்லை. அவனைக் கண்டவுடன் சிங்கங்கள் அடங்கி ஒடுங்கி இருந்தன.

கோபாலன்: அப்புறம் சர்க்கஸ்காரன் என்ன செய்தான்?



ராமன்: ஒரு பீடம் போட்டிருந்தது. அதிலே பல தட்டுக்கள் இருந்தன. சிங்கங்களை அவற்றிலே வரிசையாக ஏறி உட்காரச் சொன்னான். எல்லாச் சிங்கங்களும் அவன் சொன்னபடி செய்தன. பார்ப்பதற்கு வேடிக்கையாய் இருந்தது. எல்லாரும் கை தட்டினார்கள். சிரிப்பாக இருந்தது.

கோபாலன்: அப்புறம் என்ன நடந்தது?

ராமன்: அப்புறம் சர்க்கஸ்காரன் பெரிய வளையம் ஒன்றில் துணியைச் சுற்றிக் கொளுத்திக்கொண்டு வந்தான். அந்த வளையம் பெரிய சக்கரத்தீவட்டி போல இருந்தது. அதன் வழியாகச் சிங்கங்களைக் குதிக்கச் சொன்னான். பெரிய சிங்கம் உறுமிற்று. வேறொரு சிங்கம் வாலை உதறி அடித்தது. என்ன

நடக்குமோ என்று நாங்கள் பயப்பட்டோம். சாக கஸ்காரன் சுடீர் என்று சவுக்கைச் சுண்டினுன்.



சிங்கங்களெல்லாம் நாய்க்குட்டிகளைப்போல ஒன் றின்பின் ஒன்ருய் நெருப்பு வளையத்தின் ஊடே தாவிச் சென்றன.

கோபாலன்: நான் இன்றைக்குச் சர்க்கஸ் போய்ப் பார்க்கப் போகிறேன்.

ராமன்: இதோ மணி அடித்துவிட்டது. சர்க்கஸ் பார்த்துவிட்டு நாளைக்கு வந்து எப்படி இருந்தது என்று சொல். மறந்துவிடாதே.





கூடாரம்	பயமாய்
சர்க்கஸ்காரன்	பீடம்
சக்கரத்தீவட்டி	உறுமிற்று

பயிற்சி

கோடிட்ட இடங்களிலே கீழ்க்கண்ட சொற்களிலிருந்து ஏற்ற சொல்லை அமைத்துக் கதையைச் சுருக்கமாக எழுது:

வேடிக்கையாய்	சிங்கங்கள்	கூட்டுக்குள்ளே
உட்கார்ந்தன	வழியாக	

சர்க்கஸ்

சிங்கக் கூட்டுக்குள்ளே ஆறு —— இருந்தன. சர்க்கஸ் காரன் சவுக்கை எடுத்துக்கொண்டு —— போனான். அவன் சொன்னபடி சிங்கங்கள் பீடத்தில் வரிசையாக ஏறி ——.

பிறகு தீவளையத்தின் —— அந்தச் சிங்கங்கள் தாவிக் குதித்தன. சர்க்கஸ் பார்ப்பதற்கு —— இருந்தது.

பாடம் 11



இரக்கமுள்ள போர்வீரன்

ஒரு ராஜா படையெடுத்துச் சென்று தன்னுடைய எதிரிகளைத் தோற்கடித்தான். அவர்கள் கப்பமாகப் பொன்னும் இரத்தினங்களும் கொடுத்தார்கள். அவற்றை அவன் மாடுகளின்மேல் பொதி பொதியாக ஏற்றித் தன்னுடைய ராஜ்யத்திற்குக் கொண்டுவந்தான்.

வரும் வழியில் ஒரு மாடு பொதியைத் தாங்க முடியாமல் தள்ளாடித் தடுமாறி நடந்தது. அந்த மாட்டை ஒரு போர்வீரன் ஓட்டிக்கொண்டு வந்தான். அவன் அந்த மாடு கஷ்டப்படுவதைப் பார்த்தான். அவனுடைய மனம் இரங்கிற்று. மாட்டின்மேல் போட்டிருந்த பொதியைத் தூக்கித் தன் முதுகின்மேல் வைத்துக்கொண்டான். கொஞ்ச தூரம் நடந்தான்.

மூட்டை நிறையப் பொன் இருந்ததால் அது மிகவும் கனமாய் இருந்தது. ஆதலால் அவனுடைய கால்கள் தடுமாறின. இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு இன்னும் சிறிது தூரம் நடந்தான்.

அதற்குமேல் மூட்டையின் கனத்தை அவனால் தாங்க முடியவில்லை. அவனுக்குக் கழுத்தும் தோளும் வலித்தன. மூட்டையைக் கீழே போட்டுவிடலாம் என்று அவன் நினைத்தான். அப்பொழுது ராஜா "விடாதே! இதோ உன் வீடு வந்து விட்டதே. அங்கே எடுத்துக்கொண்டு போ. இந்தப் பொன் மூட்டை உன்னுடையது. நீ மாட்டின்மேல் காட்டின அன்புக்கு மூட்டைப் பொன்னும் ஈடாகாது" என்றான்.

எல்லோரும் 'ராஜா வீரமுள்ளவன், அன்பு உள்ளவன், கொடையாளி' என்று புகழ்ந்தார்கள்.

படையெடுத்து	கப்பம்
கொடையாளி	எதிரிகள்

பயிற்சி

1. கதையை மௌனமாகப் படி. பிறகு கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

2. இந்தப் பாடத்திலிருந்து ஆறு பெயர்ச் சொற்களையும், ஆறு வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

பாடம் 12

குடியானவனும் சித்திரக்குள்ளனும்

ஒரு சிறு குன்றின் அடிவாரத்திலே குடியானவன் ஒருவன் சிறிய கூரை வீடு கட்டி வாழ்ந்து வந்தான். குடிசையின் பக்கத்திலே இருந்த நிலத்தை உழுது பயிரிட்டு வந்தான்.

ஒரு நாள் அவனுடைய மனத்திலே ஒரு எண்ணம் உண்டாயிற்று. "இவ்வளவு பெரிய மலை பயிராகாமல் தரிசாய்க் கிடக்கிறதே. அதைப் பயிரிட்டால் ஏராளமாக விளையுமே" என்று அவன் எண்ணி, மலைச் சரிவை உழத் தொடங்கினான்.

அவன் உழுதுகொண்டிருக்கும்பொழுது, திடீரென்று ஒரு சித்திரக்குள்ளன் அவன் முன்னே தோன்றினான். அந்தச் சித்திரக்குள்ளன் குடியானவனுடைய முழங்கால் உயரம்கூட இல்லை. ஆனால் அவனுக்கு

முழ நீளத் தாடி இருந்தது. அந்தச் சித்திரகுள்ளன் மிகவும் கோபத்தோடு "யாரடா நீ? என்னுடைய வீட்டுக் கூரையை உழுது, என் தூக்கத்தைக் கலைத்து விட்டாயே. யாரைக் கேட்டு இங்கே உழுதாய்?" என்று கேட்டான்.

அதற்குக் குடியானவன் மிகவும் பணிவாக "இதை மலை என்று நினைத்திருந்தேன். உங்கள் வீட்டுக் கூரையா இது? இந்த மலைதான் உங்கள் வீடா? எனக்குத் தெரியாது. மன்னிக்கவேண்டும்" என்றான்.

சித்திரக்குள்ளன் மிகவும் கோபமாக "நன்றாய்த் தெரியாது என்று சொன்னாய்! என் கூரையை எப்படி உழுவாய்?" என்றான்.

அதைக்கேட்ட குடியானவன் மறுபடியும் சாந்தமாக "நான் உழுததினால் மலை விழுந்துவிடுமா? உனக்கு ஏன் இவ்வளவு கோபம்? உனக்கு ஒரு கெடுதலும் நேரிடாது. எனக்கு ஏதோ நன்மை கிடைக்கும். அதைக் கெடுக்கிறாயே" என்றான்.

சித்திரக்குள்ளன் மறுபடியும் "என்னுடைய நிலத்தை எப்படி உழுவாய்?" என்று கேட்டான்.

அதற்குக் குடியானவன் "உழுதது உழுதாய்விட்டது. நிலம் உன்னுடையதானால் விளையும் பயிரில் உனக்கு ஏதாவது பங்கு கொடுக்கிறேன். இதற்குக் கோபிப்பானேன்?" என்றான்.

"பங்கா? நன்றாய்ச் சொன்னாய்! நீ போடும்பயிரிலே பூமி மட்டத்திற்கு மேல் உள்ளதெல்லாம் என் பங்கு.

அடியிலுள்ள வேரை உன் பங்காக வைத்துக்கொள். சம்மதமானல் உழு" என்ருன்.

"ஆகா, சம்மதம்" என்ருன் குடியானவன்.

அதன் பிறகு குடியானவன் அந்த இடத்தை நன்ருக உழுது, முள்ளங்கி, சேனைக்கிழங்கு, வெங்காயம் ஆகிய இம்மூன்றையும் பயிர் செய்தான். பயிர் நன்ருகச் செழித்து நன்ருய்க் கிழங்கு விட்டது. சித்திரக்குள்ளனுக்கு ஒன்றுக்கும் உதவாத இலைகள் கிடைத்தன. குடியானவனுக்கு நல்ல லாபம் கிடைத்தது.

அதைக் கண்ட சித்திரக்குள்ளனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. ஆனல் தான் பேசிய ஒப்பந்தப்படி குடியானவன் நடந்துகொண்டதால், அவனைக் குற்றம் சொல்ல முடியவில்லை. "இனிமேல் குடியானவன் பயிர் செய்தால், நாம் ஏமாந்து போகலாகாது. கவனமாய் இருந்துகொள்ளவேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

மறுபடியும் குடியானவன் மலைச்சரிவை உழுதான். அப்பொழுதும் சித்திரக்குள்ளன் அவன் முன்னே தோன்றி "என்னை இனிமேல் ஏமாற்ற முடியாது. இந்த வருஷம் நீ இங்கே பயிர் செய்யவேண்டுமானால், நிலத்தின் அடியில் உள்ள அவ்வளவையும் என்னுடைய பங்காகக் கொடுத்துவிடவேண்டும்" என்றான்.

"ஆகா, அப்படியே" என்றான் குடியானவன்.

அந்த வருஷம் குடியானவன் மலைச்சாரலிலே நெல், சோளம், கரும்பு ஆகியவற்றைப் பயிர் செய்தான். பயிர் செழித்து நன்றாக வளர்ந்தது. குடியானவனுக்கு நல்ல லாபம் கிடைத்தது. சித்திரக்குள்ளனுக்குக் கிடைத்ததெல்லாம் வேர்மட்டிலும்தான்.

(இந்தக் கதையை நாடகமாக நடிக்கலாம்.)

குன்று	அடிவாரம்	தரிசாய்
ஏராளமாக	பணிவாக	கோபமாக
சாந்தமாக	சம்மதம்	லாபம்
ஒப்பந்தம்	ஏமாந்து	எச்சரிக்கையாய்

கேள்விகள்:

1. குடியானவன் ஏன் மலைச்சரிவை உழுதான்?
2. குடியானவன் முதலில் என்ன பயிரிட்டான்?
3. அவன் இரண்டாவது தடவை என்ன பயிரிட்டான்?

பயிற்சி

I. குடியானவன் நிலத்தை உழுதான். அவன் நிலத்தைப் பயிரிட்டு வந்தான்.

இவை இரண்டு வாக்கியங்கள். இவற்றை ஒரே வாக்கியமாக எழுதலாம். அது வருமாறு:

குடியானவன் நிலத்தை உழுது, பயிரிட்டு வந்தான்.

இதேமாதிரி கீழ்க்கண்ட வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுது:

1. பயிர் நன்றாகச் செழித்தது. பயிர் நன்றாய்க் கிழங்கு விட்டது.
2. ராஜா படையெடுத்துச் சென்றான். தன்னுடைய எதிரிகளைத் தோற்கடித்தான்.

II. அவன் போனான். இது ஒரு வாக்கியம். அவன் போனானா? இதுவும் ஒரு வாக்கியம்.

ஆனால் முதல் வாக்கியம் ஒரு செய்தியைச் சொல்லுகிறது. இரண்டாவது வாக்கியம் ஒரு கேள்வியைக் கேட்கிறது. கேள்வியைக் கேட்கும் வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வைப்பதில்லை; கேள்விக் குறி (?) வைக்கவேண்டும்.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் ஏற்றபடி முற்றுப்புள்ளியையோ கேள்விக்குறியையோ இட்டு எழுது:

கழுதை கனைத்ததா	மாடு மேய்ந்தது
அவள் பாடினாள்	நீ அழுதாயா
நான் பாடம் படித்தேன்	நீ பாடம் படித்தாயா

பாடம் 13

136115
சென்னை-600 008.



சைக்கிள்

1. தங்கையே பார் தங்கையே பார்;
 சைக்கிள் வண்டி இதுவே பார்.
2. இரும்பாலே செய்த வண்டி.
 எங்கெங்கும் ஓடும் வண்டி.
3. மாடில்லை குதிரையில்லை;
 மாயமதாய்ப் பறந்திடும் பார்.
4. தீயில்லை புகையுமில்லை;
 தீவிரமாய்ச் சென்றிடும் பார்.
5. காலாலே மிதிப்பதனால்
 கடும் விசையில் போயிடும் பார்.
6. ஒன்றன்பின் ஒன்றாக
 உருளும் பைதாக்களைப் பார்.
7. அக்காளும் தங்கையும் போல்
 அவை போகும் அழகைப் பார்.

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

மாயமதாய் = மாயமாய். பைதா = சக்கரம்

பாடம் 14



எருமை

எருமையும் எருதும் பார்ப்பதற்குச் சற்றேறக் குறைய ஒன்றுபோல இருக்கும்.

எருமை மாடு பெரிய மிருகம். அதன் உடல் பெரிதாய் இருக்கும். அதன் தோல் கறுப்பாயிருக்கும். அதன் தோலின்மேல் மயிர் அதிகம் இருக்காது. அதன் கொம்புகள் சற்றே முறுகியும் பின்புறமாக வளைந்தும் இருக்கும். அதன் கால்கள் குறுகியவையாயும் பலமுள்ளவையாயும் இருக்கும். அதன் கால்களின் நுனியிலே குளம்புகள் உண்டு. இவை அகன்றும் இரு கூறுகப் பிளவுபட்டும் இருக்கும். ஆதலால் எருமை சேற்றில் நடக்கும்போது அதன் கால்கள் சேற்றினுள்ளே அதிகம் இறங்குவதில்லை. சதுப்பு நிலப் பிரதேசங்களிலே சுமைகளை ஏற்றிச் செல்வதற்குக் குதிரை, கழுதை இவற்

றைக் காட்டிலும் எருமை ஏற்றது. எகிப்து தேசத்தில் இவ்வாறு எருமைகளை அதிகம் உபயோகிக்கிறார்கள்.

உடலைத் தண்ணீரில் அமிழ்த்திக்கொண்டு படுத்துக்கிடப்பது எருமை மாட்டுக்கு வெகு பிரியம். மணிக்கணக்காய் அது தண்ணீரில் படுத்துக்கிடக்கும். அப்போது அதன் தலைமட்டிலும்தான், தண்ணீருக்கு வெளியே தென்படும். சேற்றில் புரண்டு உடல் முழுதையும் சேருக்கிக்கொள்ளுவதும் எருமைக்குப் பிரியம். சேறு பூசியிருந்தால் ஈக்கள் முதலிய பூச்சிகள் அதை அதிகம் கடிக்கமாட்டா.

மாட்டின்மேலும் கழுதையின்மேலும் பொதி ஏற்றிக்கொண்டு போவதைப்போல் எருமையின்மேல் சாதாரணமாகப் பொதிகளை ஏற்றிக்கொண்டு போவதில்லை. நீரினால் கெடக்கூடிய பொதிகளாய் இருந்தால் அவற்றை எருமையின்மேல் ஏற்றுவதே இல்லை. எருமைக்குத் தண்ணீரிலும் சேற்றிலும் படுத்துக்கிடக்கவேண்டும் என்னும் ஆசை உண்டு. அப்படிச் செய்துவிடும் என்று பயந்துதான் அதன்மேல் பொதிகளை ஏற்றுவதில்லை. பொதியை ஏற்றிக்கொண்டு எருமை மந்தமாய்ச் செல்லும்போது, வழியில் எங்கேனும் ஓடையோ சதுப்பு நிலமோ குறுக்கிட்டால், திடீரென்று அப்படியே சேற்றில் படுத்துவிடும். அதன்மேல் ஏற்றிய சுமையைப்பற்றி அதற்குச் சிறிதும் கவலையே கிடையாது.

ஏரிலே பூட்டி உழுவதற்கு எருமை மிகவும் ஏற்ற மிருகம். நிறையப் பாரம் ஏற்றிய கட்டை வண்டிகளை இழுப்பதற்கும் அதை உபயோகப்படுத்துகிறார்கள்.

மிகவும் கனமான பாரங்களை ஏற்றிய வண்டிகளை இழுப்பதற்கு ஆப்பிரிக்காவிலே நாலு, அல்லது ஆறு, அல்லது எட்டு எருமைகளை ஜோடி ஜோடியாகப் பூட்டி இழுக்கச் செய்வார்கள். எருமையின் மூக்கைத் துளைத்து ஒரு கயிற்றைப் பூட்டியிருப்பார்கள். அந்தக் கயிற்றுக்கு மூக்காங் கயிறு என்று பெயர். மூக்காங் கயிற்றிலே வேறொரு கயிற்றைக் கட்டிப் பிடித்து எருமை மாட்டை அடக்கி ஓட்டுவார்கள்.

பசுமாட்டைவிட எருமை அதிகமாகப் பால் கறக்கும். எருமைப் பாலிலிருந்தும் வெண்ணெய் எடுப்பார்கள். வெண்ணெயை உருக்கி, நெய் காய்ச்சுவார்கள்.

எருமை மாட்டின் தோலானது கெட்டியாயும் பலமுள்ளதாயும் இருக்கும். ஆகையால் சேணம், கடிவாளம் முதலிய தோற்சாமான்களைச் செய்வதற்கு அது அதிகமாய்ப் பயன்படுகிறது.

வீட்டு எருமையானது ஒரு காலத்தில் காட்டு எருமையாய் இருந்தது. இக்காலத்திலும்கூட நமது தேசத்தின் சில பகுதிகளிலும், ஆப்பிரிக்காவிலும் காட்டெருமை காணப்படுகிறது. அது மிகவும் மூர்க்கமான மிருகம். அதைப் பார்ப்பதற்கே பயமாக இருக்கும். யாதொரு முகாந்தரமுமின்றி மனிதனைத் தாக்கும் மிகச் சில மிருகங்களுள் அது ஒன்று. வேங்கைப் புலியையும் அது அஞ்சாது எதிர்க்கும். எந்த மிருகத்தைக் கண்டும் அஞ்சாத புலியும்கூட காட்டெருமையைக் கண்டு அஞ்சும்.

அதை வேட்டையாடுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அதற்கு இரத்தக் காயம் பட்டு

விட்டால் அது மிகவும் துணிகரமாய் எதிர்த்துத் தாக்கும். அதற்கு நல்ல மோப்ப சக்தி உண்டு. ஆதலால் அது தன்னை வேட்டையாடிக் காயப்படுத்தியவனை வெகு தூரம் தொடர்ந்து துரத்தி வரும். கிட்ட வந்தவுடன் கொம்பினால் குத்தும்; காலினால் மிதித்து நசுக்கிக் கொல்லும்.

நமது தேசத்திலுள்ள காட்டெருமையைப் பிடித்துப் பழக்க முடியும். பழகிய எருமையைக் குழந்தைகள் கூடக் கட்டி மேய்க்கலாம். ஆனால் அதற்குக் கோபம் வந்துவிட்டால் அதை அடக்குவது கஷ்டம்.

நமது தேசத்தில் உள்ள காட்டெருமையைக் காட்டிலும் ஆப்பிரிக்காவிலுள்ள காட்டெருமை பெரியது. அதற்கு மூர்க்கமும் அதிகம். ஆப்பிரிக்காவிலே எருமைகள் பெருங் கூட்டங்களாகக் காடுகளிலே திரிகின்றன. அவற்றைப் பழக்க முடியவில்லை.

ஏறக்குறைய	முறுகி	குறுகியவை
அகன்று	கூறு	சதுப்பு நிலம்
மந்தமாய்	திடீரென்று	ஜோடி ஜோடியாக
மூக்காங் கயிறு	மூர்க்கமான	முகாந்தரம்
ஜாக்கிரதையாக	துணிகரமாய்	

கேள்விகள்:

1. எருமை மாட்டின் தோல் எப்படி இருக்கும்?
2. எருமை மாடு ஏன் சேற்றில் படுத்துக் கிடக்கிறது?
3. எருமை மாடு என்னென்ன வேலைகள் செய்யும்?

பயிற்சி

இவற்றுக்கு எதிர்ச் சொற்கள் சொல்லு:

நீண்டவை	நெருங்கி	வேகமாய்
குறைய	சாந்தமான	

பாடம் 15

சாங்கோ பாஞ்சாவின் தீர்ப்பு

[கோர்ட்டு அறை. ஒரு பக்கத்தில் வாதி நிற்கிறான். மற்றொரு பக்கத்தில் ஒரு மூங்கில் தடியை வைத்துக் கொண்டு பிரதிவாதி நிற்கிறான். நீதிபதி சாங்கோ பாஞ்சா பீடத்தின்மேல் நாற்காலியில் உட்கார்ந் திருக்கிறார். கோர்ட்டு வேலைக்காரன் ஒருவன் பிரதி வாதியின் பக்கத்தில் நிற்கிறான். ஒரு பக்கத்தில் பொது ஜனங்களும் மற்றொரு பக்கத்தில் கோர்ட்டு அதிகாரிகளும் இருக்கிறார்கள்.]

நீதிபதி:—இப்பொழுது விசாரிக்கவேண்டிய வழக்கு என்ன வழக்கு?

வாதி:—கனம் நீதிபதி அவர்களே! வட்டிக்குக் கடன் கொடுத்து நான் ஜீவனம் செய்துவருகிறேன். இதோ நிற்கிறானே இவன் [பிரதிவாதியைச் சுட்டிக் காட்டுகிறான்] என்னிடமிருந்து பல தடவைகள்

கடன் வாங்கியிருக்கிருன். வாங்கின கடனை எப்போதும் தவருமல் கொடுத்துவிடுவான். மூன்று மாதத்திற்கு முன்ணல் "கடன் வேண்டும்" என்று இவன் என்னிடம் வந்தான். "இரண்டு மாதத்தில் திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடு கிறேன்" என்று சொன்ஞன். அவன் கொண்டுவர வில்லை. அதற்குப்பின் நான் பதினைந்து நாள் வரையில் "அவன் வருவான், வருவான்" என்று காத்திருந்தேன். அதற்கு அப்புறமும்கூட அவன் வரவில்லை. ஆகையால் நானே அவனுடைய வீட் டுக்குப் போனேன். "பணத்தைக் கொடு" என்று அவனைக் கேட்டேன். "உன் கையிலேயே நானே நேரில் பணத்தைக் கொடுத்துவிட்டேனே" என்று அவன் சொன்ஞன். நான் அப்படியே திகைத்துப் போய்விட்டேன். உண்மையில் ஒரு காசுகூட அவன் எனக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை. இது சத்தியம்.

நீதிபதி:—[பிரதிவாதியைப் பார்த்து] வாதி சொல்லு வதைக் கேட்டாயே. நீ என்ன சொல்லுகிருய்?

பிரதிவாதி:—கனம் நீதிபதி யவர்களே! வாங்கின கடனை ஒழுங்காகத் திருப்பிக் கொடுப்பதுதான் என்னு டைய வழக்கம். அவனுடைய கையிலேயே நான் பணத்தைக் கொடுத்துவிட்டேன் என்று சத்தியம் பண்ண நான் தயார்.

நீதிபதி:—[வாதியைப் பார்த்து] நீ என்ன சொல்லு கிருய்?

வாதி:—நான் கொடுத்த கடனைக் "கொடுத்துவிட்டேன்" என்று அவன் சத்தியம் பண்ணினால் அவனை விட்டுவிடுகிறேன். அதற்குமேல் நான் வழக்குச் சொல்லவில்லை.

நீதிபதி:—[பிரதிவாதியைப் பார்த்து] இதோ இந்தப் புஸ்தகத்தைத் தொட்டு இதன்மேல் ஆணையாக நீ சத்தியம் பண்ணுவாயா?

பிரதிவாதி:—எஜமான்! அப்படியே செய்கிறேன் [தான் இருந்த இடத்திலிருந்து நடந்து, வாதியின் கிட்ட வருகிறான். வாதியைப் பார்த்து] அப்பா! இந்தா, இதை வைத்துக்கொள். [தன் கையிலிருந்த மூங்கில் தடியை வாதியின் கையில் கொடுக்கிறான். நீதிபதியின் கிட்டச் செல்கிறான்] இந்தப் புத்தகத்தின்மேல் ஆணை. நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். சொல்லுவதெல்லாம் நிஜம், நிஜம் தவிர வேறொன்றும் இல்லை. நான் கடன் வாங்கின தொகையை என் கையால் நானே வாதியின் கையிலே திரும்பக் கொடுத்துவிட்டேன். இது சத்தியம்.

நீதிபதி:—[வாதியைப் பார்த்து] அவன் சத்தியம் செய்து விட்டானே. நீ இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?

வாதி:—அவன் இஷ்டம்போல் அவன் வீட்டுக்குப் போகட்டும். அவன் நன்றாக இருக்கவேண்டும்!

நீதிபதி:—[பிரதிவாதியைப் பார்த்து] அப்படியானால் நீ போகலாம்.

[பிரதிவாதி வாதியினிடமிருந்து மூங்கில் தடியைத் திரும்ப வாங்கிக்கொள்கிறான். வெளியே போகப் புறப்படுகிறான்.]

நீதிபதி:—[பிரதிவாதியைப் பார்த்து] அப்பா! சற்றே இரு. உன் கையில் இருக்கிற தடியை என் வேலைக்காரன் கையில் கொடு.

[பிரதிவாதி தடியை நீதிபதியின் வேலைக்காரன் கையில் கொடுக்கிறான்.]

நீதிபதி:—[வேலைக்காரனைப் பார்த்து] அந்தத் தடியை வாதியினிடம் கொடு

[வேலைக்காரன் அப்படியே செய்கிறான்.]



வாதி:—இந்தத் தடியை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய?

நீதிபதி:—பணம் திரும்பத் தரவேண்டும் என்று நீ கேட்டாயே?

வாதி:—பணம் வேண்டும் என்று ஆசைப்பட்டவனுக்கு ஒன்றுக்கும் உதவாத மூங்கில் தடி எதற்கு?

நீதிபதி:—நான்தான் சொன்னேனே. நீ கேட்ட பணத்துக்குப் பதில் இது. [கோர்ட்டில் உள்ளவர்களில் சிலர் பரிகாசமாகச் சிரிக்கிறார்கள். வாதி ஒன்றும் தெரியாமல் விழிக்கிறான்.]

நீதிபதி:—[வாதியைப் பார்த்து] எங்கே, அந்த மூங்கில் தடியை ஒடி பார்க்கலாம்.

[வாதிக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் தடியை ஒடிக்கிறான். நாணயங்கள் கலகலவென்று தடியிலிருந்து சிந்தி உருளுகின்றன.]

நீதிபதி:—[அமைதியாக, வாதியைப் பார்த்து] அந்த நாணயங்களைப் பொறுக்கி எடு. எவ்வளவு இருக்கிறது என்று எண்ணிச் சொல்.

வாதி:—[பொறுக்கி, எண்ணிப் பார்த்துவிட்டு] நான் கடன் கொடுத்த தொகை சரியாக இருக்கிறது. [சற்றுத் தயக்கத்துடன்] இந்த மூங்கில் தடியின் உள்ளே இவ்வளவு பணமும் இருந்தது என்று நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

நீதிபதி:—அவன் சத்தியம் செய்தபோது அவன் முகத்தைப் பார்த்தேன். பொய் சொல்லுகிறவனைப்போல் தோன்றவில்லை. அவன் சொல்வது உண்மைதான் என்று எனக்குத் தோன்றிற்று. அவன் சத்தியம் செய்வதற்கு முன் தன் கையிலிருந்த தடியைப் பக்கத்திலிருந்த வேலைக்காரன் கையில் கொடுக்கவில்லை. தான் நின்ற இடத்திலிருந்து உன்னிடம் வந்து உன் கையில் தடியைக் கொடுத்தான். அதன் பிறகு கூசாமல் சத்தியம் செய்தான். ஆகையால் உனக்குக் கொடுக்கவேண்டிய பணம் தடியின் உள்ளே இருக்கவேண்டும் என்று முடிவு செய்தேன்.



பாடம் 16

அரசனும் வேலைக்காரனும்

ஏழை ஒருவன் அரசனிடம் போய் "மகாராஜா, எனக்கு ஒரு வேலை வேண்டும்" என்றான்.

அதற்கு அரசன் "உனக்கு என்ன தெரியும்?" என்றான்.

அதற்கு ஏழை "மற்றவர்கள் தூங்கும்போது காவல் காக்கத் தெரியும். மற்றவர்கள் காக்கும்போது தூங்கத் தெரியும். பலவகைப் பானங்கள் ஒன்றாய்க் கலந்திருந்தாலும்கூட அவை இன்னவென்று சொல்லத் தெரியும். விருந்து வைத்தால் தக்க விருந்தாளிகளை அழைக்கத் தெரியும்" என்றான்.

அதைக்கேட்ட அரசன் "உன்னைச் சோதித்துப் பார்த்து வேலைக்கு வைத்துக்கொள்கிறேன். பகலில் காவலுக்கு வேறு ஆட்களை நியமித்திருக்கிறேன். இன்று முதல் இரவிலே நீ காவல் காக்கவேண்டும்" என்றான்

"சரி" என்று ஒப்புக்கொண்ட வேலைக்காரன் உடனே படுத்துத் தூங்க ஆரம்பித்துவிட்டான். இரவு வந்ததும் வாளை உருவிக் கையில் வைத்துக்கொண்டு, ஆள் வந்தால் குலைக்கும் வேட்டை நாய் ஒன்றையும் கூடத் துணைக்கு வைத்துக்கொண்டு, காவல் காத்து வந்தான்.

அதைக்கண்ட அரசன் "முதல் சோதனையில் தேறி விட்டாய். இரண்டாம் சோதனையைப் பார்ப்போம். இதோ இந்தக் கிண்ணத்தில் உள்ளதைக் குடித்துவிட்டு உன் அபிப்பிராயத்தைச் சொல்" என்றான்.

அதைக் குடித்துவிட்டு அந்த வேலைக்காரன் "நன்றாய் இருந்தது. நன்றாய் இருக்கிறது. நன்றாய் இருக்கும்" என்றான்.

அதைக்கேட்ட அரசன் "நீ சொல்வது விளங்க வில்லையே. தெளிவாய்ச் சொல்" என்றான்.

வேலைக்காரன் "இந்தக் கிண்ணத்திலே புளித்த பழைய மோரையும், இன்று கடைந்த மோரையும், சிறிது நேரத்திற்குமுன் உறைகுத்திய பாலையும் ஒன்ருகக் கலந்திருக்கிறது. புளித்த மோர் ஒரு காலத்தில் நன்ருய் இருந்த மோர். கடைந்த மோர் இன்று நன்ருய் இருக்கிறது. உறைகுத்தின பால் இனிமேல் நன்ருய் இருக்கும்" என்று சொன்னுன்.

அதைக்கேட்ட அரசன் சந்தோஷம் அடைந்து "இரண்டாவது சோதனையிலும் நீ தேறிவிட்டாய். இனி மூன்ருவது சோதனையைப் பார்க்கவேண்டும்" என்ருன்.

"பாருங்கள்" என்ருன் வேலைக்காரன்.

"நான் விருந்து வைக்கப்போகிறேன். தக்க விருந்தாளிகளை அழைத்து வா" என்ருன் அரசன்.

வேலைக்காரன் அரசனுடைய சத்துருக்கள் அனைவரையும் தேடிப் பிடித்து விருந்துக்கு அழைத்துவந்தான். அதைக்கண்ட அரசன் வியப்படைந்து, அவனைத் தனியாய் அழைத்து, "இவர்களா தக்க விருந்தாளிகள்? என்னுடைய சத்துருக்கள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாயே" என்று கேட்டான்.

அதற்கு வேலைக்காரன் "இவர்கள்தாம் தக்க விருந்தாளிகள். நீங்கள் தங்களை அன்புடன் அழைத்தீர்கள் என்று அவர்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் எல்லாரும்

உங்களுக்கு நல்ல சிநேகிதர்கள் ஆகிவிடுவார்கள்" என்முன்.

அரசன் அவனைப் பார்த்து "நீ மூன்ருவது சோதனையிலும் வெற்றி பெற்ருய். நீ என்னிடத்திலேயே இரு" என்று சொல்லி அவனுக்குப் பெரிய உத்தியோகம் ஒன்றை அளித்தான்.

பானங்கள்	தேறிவிட்டாய்	அபிப்பிராயம்
சோதித்து	வியப்பு	சந்தோஷம்
சோதனை	விருந்தாளி	சத்துருக்கள்
உறைகுத்திய	நியமித்து	உத்தியோகம்
கோர்ட்டு	வாதி	பிரதிவாதி
நீதிபதி	பொதுஜனங்கள்	அதிகாரி
ஜீவனம்	திகைத்து	சத்தியம்
ஆணை	நிஜம்	இஷ்டம்
பரிகாரமாக		

1. கீழ்க்கண்ட சொற்களுக்கு ஏற்ற எதிர்ச்சொற்களை எழுது:

பகல்	வருத்தம்	தவறிவிட்டாய்
சிநேகிதர்கள்	சிறிய	

2. ஒரு பையனை அரசனாகவும், மற்றொரு பையனை வேலைக்காரனாகவும் வைத்துக்கொண்டு இந்தக் கதையை நாடகமாக நடிக்கலாம்.

3. இச்சொற்களுக்கு ஈடான சொற்களை எழுது:

உண்மை	பிரியம்

4. சாங்கோ பாஞ்சாவின் கதையை நாடகமாக நடியுங்கள்.

பாடம் 17

"மறந்துவிட்டேன்!"

ஒரு கிராமத்தில் கோபாலன் என்று ஒருவன் இருந்தான். அவன் பணக்காரன்; கொஞ்சம் படித்தும் இருந்தான். அவன் போட்டுக்கொண்டிருந்த செருப் புப் பிய்ந்து போய்விட்டது. புதிதாக நல்ல செருப்பு வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான்.

அந்த ஊரில் சக்கிலியன் இல்லை. அதனால் அடுத்த ஊரிலுள்ள சக்கிலியனைச் செருப்புத் தைக்கச் சொல்லலாம் என்று நினைத்தான். அந்த ஊர் மூன்றுமைல் தூரத்தில் இருந்தது. அவ்வளவு தூரம் நடக்கச் சோம்பற்பட்டுக்கொண்டு, வேலைக்காரனிடம் அளவைக் கொடுத்து அனுப்பலாம் என்று கோபாலன் தீர்மானித்தான்.

ஆகையால் அவன் மிகவும் திட்டமாக அளவு எடுத்தான். பாதத்தின் நீளம் இவ்வளவு, விரல் பக்கத் தின் சுற்றளவு இவ்வளவு, நடுப்பாதத்தின் சுற்றளவு இவ்வளவு என்று அவன் கணக்காக எழுதினான். பாதத் தைக் காகிதத்தில் வைத்து, அடிச் சுவடு தெரியும்படி யாக அதைச் சுற்றி அவன் பென்சிலால் வரைந்தான். அதை அவன் தன்னுடைய வேலையாளிடம் கொடுத் தான்.

வேலையாளுக்கு வேறு அவசர வேலை வந்துவிட்டது. அதனால் கோபாலனே நேரில் போகவேண்டியதாயிற்று.

கோபாலன் காலையில் புறப்பட்டுப்போனான். பாதி வழி போனதும், அவன் "அடடா, மறந்துவிட்டேனே!" என்று கையை உதறினான். "அளவு காகிதத்தை வீட்டில் வைத்துவிட்டேனே, முட்டாள்!" என்று தன்னைத்தானே அவன் குறை சொல்லிக்கொண்டான்.

அவன் திரும்பவும் வீட்டுக்கு வந்தான்; காகிதத்தை எடுத்து வெகு ஜாக்கிரதையாக மடியில் வைத்துக்கொண்டான். மறுபடியும் வழி நடந்து அவன் அடுத்த ஊருக்குப் போனான். அங்கே சக்கிலியனிடம், "எனக்கு நல்ல செருப்புத் தைத்துத் தரவேண்டும்" என்று அவன் சொன்னான்.

அதற்குச் சக்கிலியன், "ஆகா, நல்லதாகத் தைத்துத் தருகிறேன்" என்றான்.

"இந்தா! அளவு இந்தா!" என்று தன் மடியிலிருந்த காகிதத்தை எடுத்துப் பிரித்துக் கொடுத்தான் கோபாலன்.

"செருப்பு, யாருக்கு, ஐயா?" என்ருன் சக்கிலியன்.

"ஏன்? எனக்குத்தான். நான்தான் சொன்னேனே" என்று கோபமாகப் பேசினுன் கோபாலன்.

"அப்படியானுல், அளவு காகிதம் எதற்கு ஐயா?"

"அளவு தெரிய. அளவில்லாமல் எப்படித் தைப் பாய்? பாதிவழி வந்தவன், உனக்காக மறுபடியும் வீட்டுக் குப்போய் அல்லவோ எடுத்துக்கொண்டு வந்தேன்?" என்ருன் கோபாலன்.

"ஏன்? ஐயா, உங்கள் கால்தான் இருக்கிறதே?" என்ருன் சக்கிலியன்.

"ஓகோ! அப்படியா? அதை மறந்துவிட்டேன்" என்று தலையைச் சொறிந்தான் கோபாலன்.

வந்த சிரிப்பை அடக்குவதற்காகச் சக்கிலியன் தலையைக் குனிந்துகொண்டு கோபாலனுடைய காலை அளவெடுக்க ஆரம்பித்தான்.

கிராமம்	சக்கிலியன்
திட்டமாக	சுவடு
ஜாக்கிரதையாக	பிய்ந்து

பயிற்சி

I

1. கதையை மௌனமாகப் படித்து, சுருக்கமாய்ச் சொல்லு.

2. ஒரு பையனைக் கோபாலனாகவும், மற்றொரு பையனைச் சக்கிலியனாகவும் வைத்துக்கொண்டு கதையை நாடகமாக நடிக்கச் சொல்லவும்.

II

கோபாலன் நடந்தான்.

இது ஒரு வாக்கியம். ஏன்? இது முடியும் பொருளைக் காட்டுகிறது.

எவன் நடந்தான்? கோபாலன் நடந்தான். 'கோபாலன்' என்ற சொல் எழுவாய்.

கோபாலன் என்ன செய்தான்? கோபாலன் நடந்தான். 'நடந்தான்' என்ற சொல் பயனிலை.

தொழிலைச் செய்வது எழுவாய். எழுவாய் செய்யும் தொழிலைத் தெரிவிப்பது பயனிலை.

இந்த வாக்கியங்களுள் ஒவ்வொன்றிலும் எழுவாய் எது? பயனிலை எது?

1. கண்ணன் வந்தான்.
2. கோழி கூவிற்று.
3. கால் ஒடிந்தது.
4. புத்தகம் கிழிந்தது.

5. பழங்கள் உதிர்ந்தன.
6. பூக்கள் மலர்ந்தன.

III

கோபாலன் கையை உதறினன்.

இது ஒரு வாக்கியம். 'கோபாலன்' என்னும் சொல் எழுவாய். 'உதறினன்' என்னும் சொல் பயனிலை. கோபாலன் எதை உதறினன்? 'கையை' உதறினன். 'கையை' என்னும் சொல்லுக்குச் செயப்படுபொருள் என்பது பெயர்.

இந்த வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் எழுவாய் எது? பயனிலை எது? செயப்படுபொருள் எது?

1. அரசன் எதிரிகளைத் தோற்கடித்தான்.
2. பூமி சூரியனைச் சுற்றுகிறது.
3. பையன் பந்தை உதைத்தான்.
4. பெண் துணியைத் தைத்தாள்.

IV

கீழ்க்கண்ட சொற்களை உபயோகித்துச் சொந்த வாக்கியங்கள் எழுது:

அபிப்பிராயம்	விருந்தாளி	வியப்பு
சுவடு	சந்தோஷம்	கிராமம்

V

இந்தப் பாடத்திலிருந்து நான்கு பெயர்ச்சொற்களையும், நான்கு வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

பாடம் 18

நாவல்பழம்

ஒரு சிற்றரசன் குதிரையின்மேல் ஏறித் தன் நாட்டைச் சுற்றிவரும்போது ஓரிடத்தில் கிழவன் ஒருவன் நாவல்மரக்கன்றை நட்டுக்கொண்டிருப்பதைக் கண்டான்.

அரசன் அவனைப் பார்த்து "உனக்கு இவ்வளவு வயதாயிற்றே. இப்பொழுது மரம் வைக்கிருயே, இதனுல் யாருக்குப் பிரயோஜனம்?" என்ருன்.

அதற்குக் கிழவன் "யார் கண்டார்கள்? நானே உயிரோடிருந்து இதன் பழத்தைத் தின்ருலும் தின்னலாம். அப்படி எனக்குக் கொடுத்து வைக்கவில்லையானுலும், என் மகனுவது இதன் பழத்தைத் தின்பான்

அதற்கு அரசன் "இந்த மரம் பழுக்கும்போது நீ உயிரோடிருந்தால், அரண்மனைக்கு ஒரு தட்டுப் பழம் கொண்டுவந்து கொடு" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

சில வருஷங்களில் மரம் காய்த்துப் பழுத்தது. கிழவனும் உயிரோடு இருந்தான். அவன் ஒரு கூடை



நிறையப் பழத்தை எடுத்துக்கொண்டு, அரண்மனைக்குச் சென்று, அரசன் முன்னிலையில் வைத்தான்.

அதைக்கண்ட அரசன் மிகவும் சந்தோஷ மடைந்து அந்தக் கூடையில் பொற்காசுகளை நிரப்பிக் கிழவனை வீட்டுக்கு அனுப்பினன். கிழவன் சந்தோஷ மாக வீடு சென்றான்.

இந்தச் செய்தி அக்கம்பக்கத்தில் பரவிற்று. பக்கத்து வீட்டில் ஒரு பேராசைக்காரன் இருந்தான். அவன் தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள பழத்தை எடுத்துக்கொண்டு அரசனிடம் கொடுத்தால் தனக்கும் அரசன் பொற்காசு கொடுப்பான் என்று நினைத்தான். அவனுடைய மனைவி எவ்வளவு தடுத்துப் பார்த்தும் அவன் கேட்கவில்லை.

அவன் பழக்கூடையை எடுத்துக்கொண்டு அரண் மனைக்குச் சென்று, அரசன் முன்னிலையில் வைத்தான்.

'மகாராஜா, எனக்கும் பொற்காசு கொடுங்கள்' என்று கேட்டான்.

இப்படிக் கேட்டதால், அவன் அன்பினால் பழத்தைக் கொண்டுவரவில்லை; பேராசையால்தான் பழத்தைக்

கொண்டுவந்தான் என்பதை அரசன் தெரிந்துகொண்டான். அரசன் தன் காவற்காரர்களை ஏவினுன். ஏவவே, அவர்கள் கூடையில் இருந்த பழத்தை எடுத்துக் கல்லால் எறிவதுபோல் பேராசைக்காரன்மேல் எறிந்து அவனை அரண்மனையிலிருந்து துரத்திவிட்டார்கள்.

அவன் வருத்தத்தோடு வீடு திரும்பி வந்தான். நடந்த நிகழ்ச்சிகளைத் தன் மனைவியிடம் சொன்னுன்; "என் அதிர்ஷ்டம்தான் இப்படி நடந்தது" என்று அவன் வருத்தப்பட்டான். அதற்கு அவன் மனைவி "ஆமாம். உம் அதிர்ஷ்டம்தான்; அதில் சந்தேகமென்ன? நாவல்பழத்திற்குப் பதிலாக நம்முடைய தோட்டத்திலிருந்து மாங்காயையோ தேங்காயையோ எடுத்துக்கொண்டு போயிருந்தால் உம் கதி என்னவாயிருக்கும்? யோசித்துப்பாரும்" என்ருள்.

சிற்றரசன் பேராசைக்காரன்

இந்தக் கதையை மௌனமாகப் படி; சுருக்கமாகச் சொல்.

கேள்விகள்:

1. அரசன் கிழவனை என்ன கேட்டான்?

2. அதற்குக் கிழவன் என்ன பதில் சொன்னுன்?

3. பேராசைக்காரனுக்கு அரசன் ஏன் பொற்காசு கொடுக்கவில்லை?

பயிற்சி

I

அரசன் பொற்காசுகளைக் கூடையில் நிரப்பி, கிழவனை வீட்டுக்கு அனுப்பினான்.

இது ஒரு வாக்கியம். இதை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுதலாம். அது வருமாறு:

அரசன் பொற்காசுகளைக் கூடையில் நிரப்பினான்.

அரசன் கிழவனை வீட்டுக்கு அனுப்பினான்.

கீழ்க்கண்ட வாக்கியங்களை இதேமாதிரி இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

1. அவன் அரண்மனைக்குச் சென்று, அரசன் முன்னிலையில் நின்றான்.

2. அரசன் சந்தோஷம் அடைந்து, அவனுடைய கூடையில் பொற்காசுகளை நிரப்பினான்

II

ஒன்று	பல
குதிரை	குதிரைகள்
பழம்	பழங்கள்
அரசன்	அரசர்கள்

இடதுபக்கம் உள்ள சொற்கள் ஒன்றைக் குறிக்கின்றன. அவை ஒருமை. வலதுபக்கம் உள்ள சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிக்கின்றன. அவை பன்மை.

கீழ்க்கண்ட சொற்களில் ஒருமைச் சொற்கள் எவை? பன்மைச் சொற்கள் எவை?

நாடு	கிழவன்	வருஷம்
சிறுவன்	தோட்டம்	வருஷங்கள்
நாடுகள்	தோட்டங்கள்	கிழவர்கள்
காசுகள்	காசு	சிறுவர்கள்

பாடம் 19



ரவீந்திரநாத் தாகுர்

கல்கத்தாவிலே மகரிஷி தேவேந்திரநாத் தாகுர் என்ற பிரபு ஒருவர் இருந்தார். அவர் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

1861 ஆம் வருஷத்தில் அவருடைய ஏழாவது பிள்ளையாக ரவீந்திரநாத் பிறந்தார். அவர்கள் வீட்டிலே எப்பொழுதும் பாட்டும் நாடகமும் நடந்து கொண்டேயிருக்கும். ஆகையால் சிறு வயது முதலே ரவீந்திரநாத் தாகுருக்குப் பாட்டிலும் நாடகத்திலும் பழக்கம் ஏற்பட்டது.

குழந்தையாக இருக்கும்போதே அவர் தகப்பனுரோடு இமயமலை முதலிய இடங்களுக்குச் சென்று வந்தார். சிறு வயது முதலே அவர் பாட்டு எழுத ஆரம்பித்துவிட்டார்.

அவர் இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்ருர். ஒரு வருஷம் அங்கே இருந்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்.

இருபதாவது வயது முதல் மறுபடியும் அவர் பாட்டுக்கள் எழுத ஆரம்பித்தார்.

மறுபடியும் ஒருமுறை இங்கிலாந்துக்குச் சென்று மீண்டார்.

பிறகு முப்பதாவது வயதில் குடும்பச் சொத்துக்களை மேற்பார்க்கத் தொடங்கினுர். அப்பொழுது ஓய்வுநேரம் அதிகமாக இருந்தது. அப்பொழுதெல்லாம் பாட்டுக்களும், வசன நூல்களும், நாடகங்களும் எழுதிவந்தார்.

போல்பூருக்கு இரண்டு மைல் அப்பால் உள்ளது சாந்தி நிகேதனம். அங்கே 'விசுவ பாரதி' என்னும் கலாசாலையை அவர் ஸ்தாபித்தார்.

சிலகாலம் அரசியல் விஷயங்களில் ஈடுபட்டிருந்தார். பிறகு அவற்றினின்று விலகி மீண்டும் கவி எழுதத் தொடங்கினுர்.

அவருடைய ஐம்பதாவது வயதில் கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதை நண்பர் ஒரு

வருக்குக் காட்டினார். அவரும் தம்முடைய நண்பர்கள் பலருக்கு அதைக் காட்டினார். எல்லாரும் அதைப் பாராட்டினார்கள். பிறகு ரவீந்திரநாத் தாகுர் இங்கிலாந்துக்கு மூன்றாவது முறை சென்றார்; அமெரிக்காவுக்கும் சென்றார். அவருடைய ஐம்பத்திரண்டாவது வயதில் அவருக்கு லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள நோபல் பரிசு அளிக்கப்பட்டது. எல்லா நாடுகளும் அவரைக் கௌரவித்தன.

அவர் தமது எண்பதாவது வயது நிரம்பிய பிறகு **1941**-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதத்தில் காலம் சென்றார்.

அவரை மஹாகவிகளில் ஒருவராக உலகம் பாராட்டி வருகிறது. அவர் எழுதிய 'ஜனகணமன' என்று தொடங்கும் பாட்டானது நமது நாட்டில் எங்கும் பாடப்பட்டு வருகிறது.

மகரிஷி	மேற்பார்க்க
கலாசாலை	ஸ்தாபித்தார்
அரசியல்	நோபல் பரிசு

கேள்விகள்:

1. ரவீந்திரநாத் எப்பொழுது பாட்டு எழுதத் தொடங்கினார்?

2. ரவீந்திரநாத் தாகுருக்குப் பாட்டில் எப்படிப் பழக்கம் ஏற்பட்டது?

3. அவருக்கு என்ன பரிசு அளிக்கப்பட்டது? ஏன் அளிக்கப்பட்டது?

பாடம் 20

ஔவை

நம்முடைய தமிழ் நாட்டிலே, வெகு காலத்துக்கு முன், ஔவை என்று ஒருத்தி இருந்தாள். அவள் மிக வும் வயது முதிர்ந்த கிழவி. மிகவும் இனிய பாடல்களை அவள் இயற்றி யிருக்கிருள். அவளுடைய பாடல் களில் பல சிறந்த நீதிகளை நமக்குத் தெரிவிக்கின்றன.

அவளைப்பற்றி எத்தனையோ கதைகள் நமது நாட்டில் வழங்கிவரு கின்றன. அவள் வயது நிரம்பிய தொண்டு கிழவி. ஆதலால் அவளு டைய உடல் கூனிக் குறுகி வளைந் திருந்தது. பல சமயங்களில் அவ ளுக்கு உணவு கிடைக்கவில்லை.

ஒரு சமயம் அவள் பசியால் மிகவும் வருந்திய போது ஒருவன் அவளுக்குக் கூழ் வார்த்து, அவளு டைய பசியை ஆற்றினன். அவனைப் புகழ்ந்து அவள் ஒரு பாட்டுப் பாடினதாகப் பழங்கதை கூறுகிறது.

மிகவும் அழகான பாடல்களை நமக்கு அளித்திருக் கும் ஔவையை நாம் ஒருநாளும் மறக்கமுடியாது; மறக்கவும் மாட்டோம்.

பாடம் 21

ஔவை

1. ஔவைக் கிழவி நம் கிழவி;
அமுதின் இனிய சொற் கிழவி;
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங் கிழவி.

2. கூழுக் காகக் கவி பாடும்
கூனக் கிழவி; அவளுரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம், மறவோம், மறவோமே.

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

அமுதின் = அமிர்தத்தைவிட
செவ்வை = நன்றான. நெறி = நீதி

பயிற்சி

I. கீழுள்ள சொற்களுக்குப் பன்மைச் சொற்கள் எவை?

குடும்பம்	வீடு	குழந்தை
காட்சி	வருஷம்	பாட்டு
நாடகம்	சொத்து	நூல்
நாடு	கவி	விஷயம்

II. கீழுள்ள சொற்களுக்கு ஒருமைச் சொற்கள் எவை?

மாடுகள்	எதிரிகள்	கற்கள்
கிரணங்கள்	கிளைகள்	ஆட்கள்

பாடம் 22

தைரியமுள்ள சிறுமி

ஒரு நாள் காலை வேளையில் சாலையின் வழியாகச் சிறுமி ஒருத்தி போய்க்கொண்டிருந்தாள். சாலை ஓரத்தில் பொடிக் கற்கள் குவியல் குவியலாகக் கிடந்தன. மரக் கிளைகளில் பக்ஷிகள் பாடிக்கொண்டிருந்தன. காலைச் சூரியனுடைய பொன் நிறமான கிரணங்கள் வீசிக்கொண்டிருந்தன.

திடீரென்று ஒரு கூக்குரல் கேட்டது. சிறுமி திடுக்கிட்டு நின்றாள். ஒரு சிறு பையன் வீறிட்டுக் கதறுவது அவளுடைய காதில் பட்டது.

சிறுமி சாலையின் வழியே ஓடிச் சென்று பார்த்தாள். சாலையின் வளைவிலே ஒரு சிறு பையன் கீழே கிடப்பதையும் எருமை மாடு ஒன்று குனிந்து, குனிந்து, அவனை முட்டுவதையும் கண்டாள்.

எருமை மாடு முரட்டு மாடாய் இருந்தது. அவளுக்கு அதைக்கண்டு பயமாக இருந்தது. அக்கம் பக்கத்திலோ ஆட்கள் ஒருவரையும் காணோம். பையன் படும் கஷ்டத்தைப் பார்த்தால் அவள் மனம் சகிக்கவில்லை.

எருமை மாட்டின் முகத்தின்மேல் எதையாவது எறிந்தாலும் அல்லது அதை அடித்தாலும் அது கண்ணை மூடிக்கொள்ளும் என்பது அவளுக்குத் தெரியும். எப்படியாவது எருமை மாட்டைத் துரத்தி விட்டுப் பையனைக் காப்பாற்றவேண்டுமென்று அவள் தீர்மானித்தாள்.

பையனைப் பார்த்து, "தம்பி, பயப்படாதே. நான் இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக் குனிந்து, கை நிறையப் பொடிக் கற்களை எடுத்தாள்; எருமை மாட்டின் முகத்திலே வீசி யெறிந்தாள். மறுபடியும் முட்டப் போன மாடு, முகத்தில் கல் பட்டதும், கண்ணை மூடிக் கொண்டு சற்றே தயங்கி நின்றது. மறுபடியும் பையனை முட்டுவதற்காகக் கீழே குனிந்தது. அந்தச் சிறுமி கை நிறையக் கற்களை எடுத்து மாட்டின் முகத்தில் மறுபடியும் எறிந்தாள். பையன் சற்றே புரண்டு தள்ளிப்போனான். எருமை மாடு சிறுமியைப் பார்த்துத் திரும்பிற்று. மறுபடியும், மறுபடியும், அந்தச் சிறுமி கற்களைக் கை நிறைய

வாரித் தன்னுடைய முழுப் பலத்தோடும் எருமை மாட்டின்மீது எறியவே, அது தயங்கிப் பயந்து திரும்பிச் சாலையின் பக்கத்திலுள்ள வயலைப் பார்த்துப் போக ஆரம்பித்தது. சிறுமி விடாமல் கற்களை மீண்டும் எறிந்தாள். எருமை மாடு பயந்து ஒரே ஓட்டமாய் வயலுக்குள் ஓடிவிட்டது.

இதற்கிடையில் சாலையில் சில ஜனங்கள் ஓடிவந்தார்கள். பயந்துபோயிருந்த பையனை அவர்கள் தேற்றினார்கள். நல்ல வேளையாக அவனுக்கு அதிகமாகக் காயம் ஒன்றும் படவில்லை. அவர்கள் எல்லாரும் அந்தச் சிறுமியின் தைரியத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

தைரியம்	திடுக்கிட்டு
தயங்கி	தேற்றினார்கள்

கேள்விகள்:

1. சிறுமி ஏன் திடுக்கிட்டு நின்றாள்?
2. அவள் சாலையில் கண்டது என்ன?
3. அவள் பையனை எப்படிக் காப்பாற்றினாள்?

மௌனமாகக் கதையைப் படித்துச் சுருக்கமாகச் சொல்லு:

பயிற்சி

I

ஆண்	பெண்
சிறுவன்	சிறுமி
மகன்	மகள்
அரசன்	அரசி
தந்தை	தாய்
பாட்டன்	பாட்டி
அவன்	அவள்

II

கீழுள்ள சொற்களில் ஆணைக் குறிக்கும் சொற்கள் எவை? பெண்ணைக் குறிக்கும் சொற்கள் எவை?

அண்ணன்	மாமன்
குருடன்	அக்காள்
மனைவி	கணவன்
தங்கை	தம்பி
திருடி	தேவி

ஆணைக் குறிக்கும் சொற்கள் ஆண்பால், பெண்ணைக் குறிக்கும் சொற்கள் பெண்பால்.

பாடம் 23

கடிகாரம் எங்கே?

ந்யூட்டன் என்பவர் இங்கிலாந்தில் வாழ்ந்த ஓர் அறிவாளி. அவர் கணித சாஸ்திரப் பயிற்சியிலே இணை யற்றவர்.

சிற்சில வேளைகளில் அவர் கணக்குப் போடும் போது அவருடைய முழு மனதும் அந்த வேலையில் படிந்துவிடும். அப்பொழுது அவருக்கு வேறு ஒன்றை யும்பற்றி நினைவே இராது. பசிதாகம் எல்லாம் பறந்துபோகும்.

ஒருநாள் காலையில் அவர் தம்முடைய அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ பெரிய கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். அவருக்குப் பசியைப்பற்றிய நினைவே இல்லை. சாப்பாட்டு அறைக்கு அவர் வழக்கம்போல் வரவில்லை.

அதனால் அவருடைய சமையற்காரி ஒரு கோழி முட்டையையும் கிண்ணத்தில் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு அவருடைய அறைக்குள் போனாள். அங் கேயே முட்டையை வேகவைத்துக் கொடுத்துவிடலாம் என்று எண்ணினாள்.

அவளைக் கண்டதும் ந்யூட்டன் "நீ முட்டையை யும் பாத்திரத்தையும் வைத்துவிட்டுப் போ. நானே முட்டையை வேகவைத்துச் சாப்பிடுகிறேன். கொஞ்ச நேரம் கழித்து வா" என்றார்.

அவள் "முட்டை சரியாக மூன்று நிமிஷம் வேக வேண்டும். இதோ கடிகாரம் இருக்கிறது" என்று சொல்லிவிட்டுக் கடிகாரத்தையும், முட்டையையும், பாத்திரத்தையும் மேஜையின்மேல் வைத்துவிட்டு வெளியே போய்விட்டாள்.

கால் மணி நேரம் கழித்து அவள் மறுபடியும் உள்ளே வந்தாள். ந்யூட்டன் வலது கையில் கோழி முட்டையை வைத்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவருடைய இடது கையில் கடிகாரச் சங்கிலி இருந்தது. பாத்திரத்திலே கொதிக்கும் நீரிலே கடிகாரம் வெந்துகொண்டிருந்தது. சமையற்காரி உள்ளே வந்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை. அவருடைய மனம் வேலையில் ஊன்றிக் கிடந்தது.

சமையற்காரிக்கு அந்தக் காட்சியைக் கண்டதும் சிரிப்புத் தாங்கமுடியவில்லை. அப்பொழுதுதான் ந்யூட்டன் அவளைப் பார்த்தார். "ஏன் இப்படிச் சிரிக்கிறாய்?" என்றார்.

அதற்கு அவள் "உங்கள் கடிகாரம் எங்கே?" என்றாள்.

'இதோ' என்று வலது கையைக் காட்டினார் ந்யூட்டன். தம்முடைய கையில் உள்ளது முட்டை என்பது அப்பொழுதுதான் அவருக்குத் தெரிந்தது. "கடிகாரம் எங்கே?" என்றார்.

கொதிக்கும் நீரிலே கிடந்த கடிகாரத்தை வேலைக்காரி அவருக்குக் காட்டினாள்.

அறிவாளி	கணித சாஸ்திரம்
இணையற்றவர்	பாத்திரம்

பயிற்சி

1. இந்தப் பாடத்திலுள்ள படங்கள் ஒவ்வொன்றையும் பற்றி இரண்டு அல்லது மூன்று வாக்கியங்கள் எழுது.

2. கீழ்க்கண்ட வாக்கியத்தைச் சாதாரண வாக்கிய முறையில் மாற்றி எழுது.

நன்றாய்த் தின்போம் இப்போது
நல்ல உணவை ருசியுடனே.

பயிற்சி

கல் கிடக்கிறது.

இது ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் 'கல்' என்னும் சொல் எழுவாய். 'கிடக்கிறது' என்னும் சொல் பயனிலை.

'கல்' என்னும் எழுவாய் ஒருமைச் சொல் அல்லவா? இந்த வாக்கியத்திலுள்ள பயனிலையும் எழுவாயைப்போல் ஒருமையாகவே இருக்கிறது. இப்படித்தான் ஒவ்வொரு வாக்கியத்திலும் இருக்கவேண்டும்.

கற்கள் கிடக்கின்றன.

இதுவும் ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் 'கற்கள்' என்னும் சொல் எழுவாய், 'கிடக்கின்றன' என்னும் சொல் பயனிலை.

கற்கள் என்னும் எழுவாய் பன்மைச் சொல் அல்லவா? ஆதலால் இந்த வாக்கியத்தில் உள்ள பயனிலையும் பன்மையாகவே இருக்கவேண்டும். அப்படித்தான் இருக்கிறது. 'இருக்கின்றன' என்பது பன்மை.

I. கீழுள்ள சொற்களுள் ஒருமைச் சொற்கள் எவை? பன்மைச் சொற்கள் எவை?

ஓடுகிறார்கள்	போனான்
வருகிறான்	நடந்தது
உபயோகிக்கிறார்கள்	காட்டினான்

II. கீழ்க்கண்ட வாக்கியங்களுள் எது சரி, எவை தப்பு? ஏன்?

1. திருடன் ஓடினார்கள்.
2. கழுதை நடந்தது.
3. வேலைக்காரிகள் வந்தது.

பாடம் 24

கோக்கின் கழுத்து

(பாட்டி கதை: முதலாம் பாகம்)

ஓங்கி உயர்ந்த ஒரு மரத்தின் உச்சிக் கிளையிலே மாடப்புரு ஒன்று கூடு கட்டி வாழ்ந்தது; அந்தக் கூட்டிலே அது முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. தினந்தோறும் அது பறந்து சென்று, இரைதேடித் தன் குஞ்சுகளுக்கும் கொடுத்துத் தானும் தின்று வாழ்ந்தது.

ஒரு நாள் குள்ளநரி ஒன்று இரை அகப்படுமா என்று எங்கும் தேடி அலைந்தது. பசியால் வருந்திக்



களைத்து, ஏதாவது அகப்படாதா என்று மேலும் கீழும் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு அங்கே வந்தது. மரத்தின் உச்சியில் மாடப்புருவும் குஞ்சுகளுமாகக்

கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த ஓசை அதன் காதில் பட்டது. அதைக் கேட்ட குள்ளநரி மரத்தின் அடியில் வந்து நின்றுகொண்டு மேலே அண்ணுந்து பார்த்தது. உச்சிக் கிளையில் எட்டாத தூரத்தில் இருக்கும் மாடப் புருவையும் குஞ்சுகளையும் கண்டதும் அதன் வாய் ஊறிற்று.

"மாடப்புருவே, மாடப்புருவே! எனக்குப் பசிக் கிறது. உன் குஞ்சு ஒன்றைப் போடு" என்றது.

"நன்ருகச் சொன்னீர், நரியாரே! போம். என் குஞ்சை உமக்குத் தின்னத் தருவேனு? போம், போம்" என்றது மாடப்புரு.

"அப்படியா செய்தி! உன் குஞ்சு ஒன்றை உடனே போடாவிட்டால், நான் உயரப் பறந்து வருவேன். உன் குஞ்சுகள் அனைத்தையும் தின்றுவிடுவேன்" என்று குள்ள நரி பயமுறுத்தியது.

அதைக் கேட்டுப் பயந்த மாடப்புரு தன்னுடைய குஞ்சுகளில் சிறு குஞ்சாக ஒன்றைப் பொறுக்கிக் கீழே போட்டது. காத்துக்கொண்டிருந்த குள்ளநரி அதை லபக்கென்று கவ்வி, ஒரே விழுங்காக விழுங்கியது. பிறகு பசி தீர்ந்து சந்தோஷமாக அவ்விடத்தை விட்டுப் போயிற்று. குஞ்சை இழந்த மாடப்புரு அழுது கொண்டேயிருந்தது.

மறுநாளும் அதே வேளையில் குள்ளநரி மரத்தின் அடியில் வந்தது. மறுபடியும், "மாடப்புருவே! மாடப்

புருவே! எனக்குப் பசிக்கிறது. ஒரு குஞ்சு போடு" என்றது.

"நன்ருய்ச் சொன்னீர், நரியாரே! நேற்றுக் கொடுத்தது போதாதோ? இன்னும் ஒன்று வேண்டுமோ? நாஞ கொடுப்பேன் என் குஞ்சை? வந்த வழியே ஓடிப்போம்" என்றது மாடப்புரு.

"அப்படியா செய்தி? குஞ்சைத் தருகிருயா, இல்லையா? உன் குஞ்சு ஒன்றைப் போடாவிட்டால் மேலே பறந்து வந்து உன் குஞ்சுகளைத் தின்றுவிடுவேன். உன்னையும் தின்றுவிடுவேன்" என்று பயமுறுத்தியது.

மாடப்புரு பயந்துபோய், ஒரு குஞ்சைப் போட்டது. அதைக் குள்ளநரி லபக்கென்று பிடித்துக்

கொண்டு, நறநற என்று கடித்துத் தின்றது. தின்று விட்டுச் சந்தோஷமாய் வாலைக் குழைத்துக்கொண்டு

போயிற்று. குஞ்சுகளை இழந்த மாடப்புரு விம்மி விம்மி அழுதுகொண்டேயிருந்தது.

அப்போது ஒரு நாரை கழுத்தை நீட்டிக் கொண்டே, 'விஷ்' 'விஷ்' என்று சிறகை அடித்துக் கொண்டு உயரப் பறந்து வந்தது. அழுதுகொண்டிருந்த மாடப்புருவைப் பார்த்தது. மரத்தின் கிட்ட வந்து, மரத்துக் கிளையில் உட்கார்ந்தது. "ஏன் அம்மா அழு கிறாய், மாடப்புருவே? அழுது அழுது கண்ணெல்லாம் சிவந்து போயிற்றே. தொண்டை கம்மிப்போயிற்றே ஏனம்மா அழுகிறாய்?" என்று கீழே இறங்கிற்று.

மாடப்புரு கண்ணைத் துடைத்துக்கொண்டு, "ஒரு குள்ளநரி வந்தது. நேற்று ஒரு குஞ்சைத் தின்றது. இன்று ஒரு குஞ்சைத் தின்றது. இரண்டு குஞ்சைப் பறிகொடுத்தாய்விட்டது. நாளையும் வந்தால் என்ன செய்வேன்!" என்று முன்னிலும் அதிகமாக விம்மி விம்மி அழத்தொடங்கிற்று.

அதைக் கேட்ட நாரை, "அழாதே, அம்மா மாடப் புரு! நரி இங்கே எப்படி வந்தது? உச்சாணிக் கொம்பில் எப்படி ஏறிற்று? கூட்டிலிருந்த குஞ்சை எப்படித் தின்றது?" என்று கேட்டது.

அதற்கு மாடப்புரு, "நரி உயர ஏறவும் இல்லை. உச்சாணிக் கொம்புக்கு வரவும் இல்லை. 'குஞ்சைத் தருகிறாயா இல்லையா? தராவிட்டால் பறந்து வருவேன்' என்றது. என் குஞ்சைப் போட்டேன். அதைத் தின்றது நரி" என்று சொல்லி ஏங்கி அழுதது.

அதைக் கேட்ட நாரை, "தந்திரக் குள்ளநரி உன்னை ஏமாற்றிவிட்டதே. அழாதே அம்மா மாடப்புரு! நரி எப்படிப் பறக்கும்? சிறகு இருக்கிறதா அது பறப்பதற்கு? போனது போகட்டும். இனிமேல் நரி வந்தால் பயப்படாதே. 'போ, போ' என்று வெருட்டிவிடு. கண்ணைத் துடைத்துக்கொள். அழாதே, அம்மா மாடப்புரு! நான் போய் வருகிறேன்" என்று தேற்றித் தைரியம் சொல்லிவிட்டு, அது பறந்து போயிற்று.

மாடப்புரு கண்ணைத் துடைத்துக்கொண்டு, தன் குஞ்சுகளுக்கு இரை கொடுத்துக்கொண்டு தேறியிருந்தது.

சுற்றுமுற்றும்	மேலும் கீழும்
அண்ணாந்து	கம்மிப்போயிற்று

மேற்கண்ட சொற்களை உபயோகித்துச் சொந்த வாக்கியங்கள் சொல்லு.

கேள்விகள்:

1. மாடப்புரு எங்கே வாழ்ந்தது?

2. மரத்தின் உச்சியில் மாடப்புருவின் குஞ்சுகள் இருந்தது நரிக்கு எப்படித் தெரிந்தது?

3. மாடப்புருவைப் பயமுறுத்த நரி என்ன சொல்லிற்று?

4. நாரை மாடப்புருவினிடம் என்ன சொல்லி அதைத் தேற்றிற்று?

பயிற்சி

சமையற்காரன் வந்தான்.

இது ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் 'சமையற் காரன்' என்னும் சொல் எழுவாய். 'வந்தான்' என்னும் சொல் பயனிலை.

'சமையற்காரன்' என்னும் எழுவாய் ஆண்பால் அல்லவா? இந்த வாக்கியத்தில் உள்ள பயனிலையும் எழுவாயைப்போல் ஆண்பாலாகவே இருக்கிறது. இப்படியேதான் ஒவ்வொரு வாக்கியத்திலும் இருக்கவேண்டும்.

சமையற்காரி வந்தாள்.

இதுவும் ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் சமையற் காரி என்னும் சொல் எழுவாய். வந்தாள் என்னும் சொல் பயனிலை. சமையற்காரி என்னும் எழுவாய் பெண்பால் அல்லவா? ஆதலால் இந்த வாக்கியத்தில் உள்ள பயனிலையும் பெண்பாலாகவே இருக்கவேண்டும். அப்படித்தான் இருக் கிறது. வந்தாள் என்பது பெண்பால்.

1. கீழுள்ள சொற்களுள் ஆண்பால் எவை? பெண்பால் எவை?

ஓடுகிறாள்	நடந்தான்
வருகிறான்	வந்தான்
போனாள்	வருவாள்

2. கீழ்க்கண்ட வாக்கியங்களுள் எவை சரி, எவை தப்பு? ஏன்?

திருடன் ஓடினாள்.
பையன் நடந்தான்.
பெண் சாப்பிட்டான்.

பாடம் 25

கோக்கின் கழுத்து

(பாட்டி கதை: இரண்டாம் பாகம்)

மறுநாள் காலையில் நாக்கைத் தீட்டிக்கொண்டு மறு படியும் குள்ளநரி அங்கே வந்தது. வழக்கம்போல் "குஞ்சைத் தருகிறாயா, இல்லையா?" என்று மிரட்டிற்று.

"மாட்டேன்! போம் போம்" என்றது மாடப்புறா.

"தருகிறாயா, பறந்து வரட்டுமா? அங்கே வந்தால் உன் குஞ்சுகளைத் தின்பேன்; உன்னையும் தின்றுவிடு வேன்" என்று பயமுறுத்திப் பார்த்தது நரி.

"நன்றாய்ச் சொன்னீர், நரியாரே! இங்கே வந்தால் அல்லவோ தின்பதற்கு? உமக்குப் பறப்பதற்குச் சிறகேது? எனக்குத் தெரியாது என்று நினைத்திரோ? பொய் சொல் லிக் குள்ளநரியாரே!" என்றது மாடப்புறா.

"இதோ வந்துவிட்டேன் பார்" என்று உறுமியது குள்ளநரி.

"உம்மால்தான் முடியாதே. நாரைதான் சொல்லி விட்டதே. வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போம்" என்றது மாடப்புறா.

மாடப்புறா இனிமேல் ஏமாந்துபோகாது என்று குள்ளநரிக்குத் தெரிந்துவிட்டது. ஆகவே அது, "அப் படியா செய்தி? அந்த நாரை வந்து கெடுத்ததா? அதற் குச் சொல்லுகிறேன் வழி. அதன் கழுத்தை முறித்து விடுகிறேன் பார்!" என்று கோபமாய் உறுமிக்கொண்டு நாரையைத் தேடிக்கொண்டு போயிற்று.

அங்கே ஒரு குளத்தின் கரையில் போய்க் காத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் மீனைக் கொத்திப் பிடிப்பதற்கு நாரை அங்கே வரும் என்பது நரிக்குத் தெரியும்.

சிறிது நேரம் கழித்து, கழுத்தை நீட்டிக்கொண்டு 'விஷ்' 'விஷ்' என்று பறந்துகொண்டு நாரை அங்கே வந்து, குளத்தின் கரையில் இறங்கிற்று. இறங்கிக் காலை நீட்டி நீட்டி நடந்துகொண்டு குளத்தின் கரை ஓரமாய் இறங்கி, மீன் வருமா என்று உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தது.

நரி தன்னுடைய கையில் ஒரு தடிக்கம்பை ஊன்றி ஊன்றி நடந்துகொண்டு, நாரையின் அண்டையில் போயிற்று. "நாரையாரே, சௌக்கியமா? சாப்பிட ஏதாவது அகப்பட்டதா?" என்று கேட்டது.

"இப்பொழுதுதான் வந்தேன். இன்னும் ஒன்றும் அகப்படவில்லை. தானாகவே மீன் வந்து சேரும். அது கிடக்கட்டும். நீர் ஏன் மெலிவாய் இருக்கிறீர்? கையில் என்ன தடி?" என்றது நாரை.

"நாலு நாளாய்ப் பட்டினி. நடக்க முடியவில்லை. கண் இருட்டிக்கொண்டு வருகிறது. கால் தள்ளாடு கிறது" என்றது நரி.

"ஐயோ பாவம்" என்று நாரை இரங்கிற்று.

"நீரும்தான் வெகு நேரமாகக் காத்துக்கொண்டிருக் கிறீர். காற்றிலும் மழையிலும் நிற்கவேண்டியிருக்குமே. பலத்த காற்று அடித்தால் என்ன செய்வீர்?" என்றது நரி.

நரி இருந்த பக்கமாகத் தன் முதுகைத் திருப்பிக் கொண்டு, "இப்படி நிற்பேன்" என்று கழுத்தை நிமிர்த் திக்கொண்டு நாரை நின்று காட்டிற்று.

"ஓகோ அப்படியா! இப்பொழுது பலத்த மழை பெய்தால் என்ன செய்வீர்?" என்று நரி கேட்டது.

அதற்கு நாரை, கழுத்தை வளைத்துக்கொண்டு, "இப்படி நிற்பேன்" என்று சொல்லிக்கொண்டு, அப்ப டிச் செய்தும் காட்டியது.

அந்தச் சமயம் பார்த்து நரி தன் கையிலிருந்த தடிக்கம்பினால் நாரையின் கழுத்தில் ஓங்கி ஓர் அடி போட்டது. அதனால் நாரையின் கழுத்து முறிந்து போயிற்று. ஆகையால்தான் நாரையின் கழுத்து இன் றும் ஒடிந்ததுபோல் இருக்கிறது என்றாள் பாட்டி.

பயமுறுத்தி	உற்றுப் பார்த்து
நிமிர்த்திக்கொண்டு	உறுமிக்கொண்டு

கேள்விகள்:

1. நரி என்ன சொல்லிப் புறாவைப் பயமுறுத்திற்று?
2. புறா பயந்ததா? ஏன் பயப்படவில்லை?
3. நாரையின்மேல் நரி ஏன் கோபித்துக்கொண்டது?
4. நரி நாரையை எப்படி ஏமாற்றிற்று?

பயிற்சி

I. இடது பக்கத்தில் கொடுதத சொற்களோடு வலது பக்சத்திலிருக்கும் சொற்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப படி.

நான் ——	ஓடுகிறது
நீ ——	ஓடுகிறான்
அவன் ——	ஓடுகிறேன்
அவள் ——	ஓடுகிறாய்
அது ——	ஓடுகிறாள்

II. இடது பக்கத்தில் கொடுத்த சொற்களோடு வலது பக்கத்திலிருக்கும் சொற்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் படி.

நாம் ——	ஓடுகின்றன
நாங்கள் ——	ஓடுகிறீர்கள்
நீர் ——	ஓடுகிறோம்
நீங்கள் ——	ஓடுகிறீர்
அவர் ——	ஓடுகிறோம்
அவர்கள் ——	ஓடுகிறார்
அவை ——	ஓடுகிறார்கள்

பாடம் 26

ஜாம்ஷட்ஜி நஸர்வான்ஜி டாட்டா

டாட்டா பார்ஸீ ஜாதியைச் சேர்ந்தவர். பார்ஸீக்கள் என்பவர்கள் ஒரு காலத்திலே பாரஸீகத்திலே வசித்துப் பிறகு இந்தியாவிலே குடியேறியவர்கள். இவர்கள் அக்கினியைத் தெய்வமாகக் கொண்டாடுபவர்கள்.

இவர் பிறந்தது 1839 ஆம் வருஷம். இவர் பெரிய வியாபாரிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய குடும்பமானது ஒரு காலத்தில் மிகவும் செல்வமான நிலையில் இருந்தது. பிறகு கஷ்ட தசையை

அடைந்து, மறுபடியும் உயர்ந்த நிலையை அடைந்து விட்டது.

இவர் புதிது புதிதாய்ப் பற்பல காரியங்களைத் தொடங்கியவர். நாகபுரியிலே துணிகள் நெய்யும் எந்திரசாலை ஒன்றை ஸ்தாபித்தார்.

நமது நாட்டிலே விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடத்துவதற்காக ஒரு நிலையத்தை ஏற்படுத்தவேண்டும் என்று இவர் பலகாலமாக எண்ணியிருந்தார். அதைப் பற்றி அடிக்கடி கனவு கண்டிருந்தார் என்றுகூடச் சொல்லலாம். பங்களூரில் இப்பொழுது உள்ள இந்திய விஞ்ஞான நிலையம் இவர் கண்ட அக்கனவுகளின் விளைவு. இவர் அளித்த நன்கொடை அதைத்தொடங்கி நடத்தி வருவதற்கு மிகவும் உதவியாயிருந்து வருகிறது.

இப்பொழுது டாட்டா நகரம் என்றும், ஜாம் ஷெட்பூர் என்றும் பிரசித்திபெற்ற இடங்கள் ஒரு காலத்தில் வெறும் காடாய் இருந்தன. அங்கே இப்பொழுது இரும்பையும் எஃகையும் செய்யும் மிகப் பெரிய எந்திர சாலை ஏற்பட்டிருக்கிறது. அதிலே நாற்பத்தையாயிரம் ஜனங்களுக்குமேல் வேலை செய்கிறார்கள். இதுவும் இவருடைய முயற்சியால்தான் உண்டாயிற்று.

சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் பம்பாயில் உள்ள எந்திரசாலைகளெல்லாம் நிலக்கரியை எரித்து வேலைசெய்து வந்தன. ஆகையால் ஊரெங்கும் அழுக்கும், கரியும், புகையுமாக இருந்தது. பம்

பாய்க்கு மின்சார சக்தியைக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் இவருடைய மனத்தில் உதித்தது. அந்த எண்ணத்தையும் நிறைவேற்றினர். இப்பொழுது பம்பாயில் ஆயிரக்கணக்கான எந்திரசாலைகள் மின்சார சக்தியால் வேலைசெய்கின்றன. பம்பாயில் சின்னஞ் சிறு குடிசைகளிலும் மின்சார விளக்குப் பிரகாசமாக எரிகிறது.

இவர் ஐரோப்பாவில் 1904 ஆம் வருஷத்தில் இறந்தார். இவரது உடலைக் கப்பலில் ஏற்றி, பம்பாய்க்குக் கொண்டுவந்தார்கள். உடலைக் கப்பலிலிருந்து இறக்கியதும், இவரைக் கௌரவிக்கும்பொருட்டு, பம்பாய் நகரத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடித் தெருக்களில் சென்றூர்கள்.

மிகச் சிறந்த பல அரிய காரியங்களைச் செய்த ஜாம்ஷெட்ஜி நவுர்வான்ஜி டாட்டா ஒரு மகான் என்பதில் என்ன சந்தேகம்?

பார்ஸீ	பிரசித்தி பெற்ற	கஷ்டதசை
அக்கினி	மின்சார சக்தி	நன்கொடை
குடும்பம்	பாரஸீகம்	எஃகு
எந்திரசாலை	வியாபாரி	சின்னஞ்சிறு

கேள்விகள்:

1. டாட்டாவின் முழுப் பெயர் என்ன?
2. அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?
3. பார்ஸீக்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
4. டாட்டாவினுடைய ஆசையாலும் முயற்சியாலும் நிறைவேறின காரியங்கள் எவை?

பயிற்சி

I. உயிர். இந்தச் சொல்லில் உ, யி, ர் என்னும் மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன.

உ என்னும் எழுத்துக்கு உயிரெழுத்து என்பது பெயர். ர் என்னும் எழுத்துக்கு மெய்யெழுத்து என்பது பெயர். யி என்னும் எழுத்துக்கு உயிர்மெய் யெழுத்து என்பது பெயர்; மெய் யெழுத்தாகிய ய் என்னும் எழுத்தும் உயிர் எழுத்தாகிய இ என்னும் எழுத்தும் ஒன்றாகச் சேருவதால் உண்டாகும் எழுத்து இது. அதனால் இதற்கு உயிர்மெய் யெழுத்து என்பது பெயர்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பவை உயிர் எழுத்துக்கள். தமிழில் பன்னிரண்டு உயிரெழுத்துக் கள் இருக்கின்றன.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பவை மெய்யெழுத்துக்கள். தமிழில் பதினெட்டு மெய்யெழுத்துக்கள் இருக்கின்றன.

பதினெட்டு மெய்யெழுத்துக்களில் ஒவ்வொன்றோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களில் ஒவ்வொன்றும் தனித்தனி யாகச் சேரும்போது உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாகின் றன. ஆகையால் தமிழில் 18 × 12 அதாவது 216 உயிர்மெய் யெழுத்துக்கள் இருக்கின்றன.

ஜ், ஷ், ஸ், ஹ், க்ஷ் என்பவை வடமொழி மெய் யெழுத் துக்கள்.

இதுதான் எழுத்துவரிசை.

II. கீழுள்ள சொற்களில் உயிரெழுத்து எது? மெய் யெழுத்து எது? உயிர்மெய் யெழுத்துக்கள் எவை?

பூனை ஆந்தை சூரியன்

பாடம் 27

காகிதக் கூடை

பிரான்ஸ் தேசத்திலே கியூரி என்ற விஞ்ஞானி ஒருவர் இருந்தார். அவர் இரசாயன ஆராய்ச்சி செய்து வந்தார்.

அவருடைய மனைவி போலந்து நாட்டைச் சேர்ந்தவள். பிரெஞ்சு பாஷையில் அவளை மதாம் கியூரி என்பார்கள். அவளும் மிகப் பெயர்பெற்ற விஞ்ஞானி. அவள் செய்த ஆராய்ச்சிகளுக்காக அவளுக்கு இரண்டு முறை நோபல் பரிசு அளித்திருக்கிறார்கள். ஆதலால் அவள் மகா புத்திசாலி என்பதில் சந்தேகமில்லை.

ஒருநாள் கியூரி உலாவிவரச் சென்றார். மதாம் கியூரி வீட்டிலிருந்தாள். கியூரி வெளியிலிருந்து உள்ளே வரும்போது குழந்தையின் அழுகுரல் அவருடைய காதில் பட்டது. குழந்தை எங்கேயோ இருந்து கத்தியது அவர் காதில் கேட்டதே ஒழிய குழந்தை இருக்குமிடம் அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. மதாம் கியூரி மேஜையின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு எழுதிக்கொண்டிருப்பதைக் கண்டார். எழுதிக் கிழித்த காகிதத் துண்டுகளை அவள் இடது கையால் தன் பக்கத்திலிருந்த காகிதக் கூடைக்குள் திணித்துக்கொண்டிருந்தாள்.

கியூரி கிட்ட வந்ததும் காகிதக் கூடைக்குள்ளிருந்துதான் குழந்தை அலறிக்கொண்டிருந்தது என்

பது அவருக்குத் தெரிந்தது. ஆனால் குழந்தை கத்தும் குரல் மதாம் கியூரியினுடைய காதில் பட்டதாகத் தெரியவே இல்லை.

தன்னுடைய குழந்தையின் அழுகுரல் கூடக் காதில் படாமல் அவ்வளவு முழுமனத்தோடும் விஞ்ஞான ஆராய்ச்சியில் அவள் கவனம் செலுத்தியிருந்தாள். இவ்வளவு கவனமாக ஆராய்ச்சிகளை நடத்தியதால்தான் மதாம் கியூரி ரேடியம் என்னும் பொருளைக் கண்டுபிடித்தாள். அந்தப் பொருள் மிகவும் பயனுள்ள பொருளாக ஆகிவிட்டது. தீராத வியாதிகள் பலவற்றை ரேடியத்தால் இப்பொழுது குணப்படுத்தி வருகிருர்கள்.

வேறொருநாள் மதாம் கியூரி ஏதோ ஒன்றிலே தன்னுடைய முழுமனத்தையும் செலுத்தியிருந்தாள். அப்பொழுது அவளுடைய வீட்டு வேலைக்காரி பரபரப்பாக ஓடிவந்தாள். "அம்மா, அம்மா! நீங்கள் கொடுத்த ஊசியை விழுங்கிவிட்டேன். ஊசி வயிற்றுக்குள்ளே போய்விட்டது" என்ருள்.

உடனே மதாம் கியூரி மிகவும் அமைதியாக "அதற்கு ஏன் வருத்தப்படுகிருய்? அந்த ஊசி போனுல் போகட்டும். வேறு ஓர் ஊசி தருகிறேன்" என்ருள். ஊசியை விழுங்கிய வேலைக்காரி கஷ்டப்படுவாளே என்னும் எண்ணம் அப்போது அவளுக்கு வரவில்லை. ஆராய்ச்சியில் அவளுடைய மனத்தைப் பறிகொடுத்து விட்டபடியால், வேருென்றையும்பற்றி அவளுடைய மனம் ஆழ்ந்து கவனிக்கவில்லை.

இரசாயன	ஆராய்ச்சி
விஞ்ஞானி	நோபல்
ரேடியம்	பரபரப்பாக

கேள்விகள்:

1. மதாம் கியூரி என்பவள் யார்?

2. ரேடியத்தினுல் என்ன உபயோகம்?

3. இந்தப் பாடத்தில் வரும் கதைகள் இரண்டையும் சுருக்கமாகச் சொல்லு.

பயிற்சி

I. கீழ்க்கண்ட சொற்களிலுள்ள உயிர்மெய் யெழுத்துக்களை மெய் யெழுத்துக்களாகவும் உயிர் எழுத்துக்களாகவும் பிரித்து எழுதுக.

பசி காடு குருவி

II. (1) க் என்னும் மெய் யெழுத்தோடு உயிர் எழுத்துக்களைச் சேர்த்தால் உண்டாகும் உயிர்மெய் யெழுத்துக்களை எழுது.

(2) ஔ, ஐ என்னும் உயிர் எழுத்துக்களை க், த், ன், ண் என்னும் மெய் யெழுத்துக்களோடு சேர்த்தால் உண்டாகும் உயிர்மெய் யெழுத்துக்களை எழுது.

பாப்பா பாட்டு

1. ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா.
வாலைக் குழைத்து வரும் நாய் தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

3. வண்டி இழுக்கும் நல்ல குதிரை,—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு,—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

4. காலை எழுந்தவுடன் படிப்பு,—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

5. தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

—சி. சுப்பிரமணிய பாரதி

கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
3. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
4. கிட்டா(து) ஆயின் வெட்டென மற.
5. கீழோர் ஆயினும் தாழ உரை.
6. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
7. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
8. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
9. சான்றோர் என்கை ஈன்றோட்(கு) அழகு.
10. சூதும் வாதும் வேதனை செய்யும்.
11. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
12. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
13. தாயில் சிறந்தொரு கோயிலும் இல்லை.
14. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
15. தீராக் கோபம் போரா முடியும்.
16. நல் இணக்கம் அல்ல(து) அல்லல் படுத்தும்.
17. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
18. பாலோ(டு) ஆயினும் காலம் அறிந்(து) உண்
19. பூலையும் கொலையும் களவும் தவிர்.
20. பொல்லாங்(கு) என்பவை எல்லாம் தவிர்.
21. மருந்தே ஆயினும் விருந்தோ(டு) உண்.
22. மின்னுக்(கு) எல்லாம் பின்னுக்கு மழை.
23. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
24. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.
25. மேழிச் செல்வம் கோழை படாது.
26. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
27. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்(கு) அழகு.
28. ஓதாதார்க்(கு) இல்லை உணர்வொடும் ஒழுக்கம்.

RRR
855

பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்.
3. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
4. ஆனை வரும் பின்னே
   மணியோசை வரும் முன்னே.
5. இளங் கன்று பய மறியாது.
6. இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே
7. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
8. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
9. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
10. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
11. கந்தை யானாலும் கசக்கிக் கட்டு,
    கூழானாலும் குளித்துக் குடி.
12. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
13. குறை குடம் ததும்பும்,
    நிறை குடம் ததும்பாது.
14. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கு.
15. கெடுவான் கேடு நினைப்பான்.
16. தருமம் தலைகாக்கும்.
17. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
18. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
19. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்.
20. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
21. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
22. விளையும் பயிர் முளையிலே தெரியும்.

குறிப்புரை

கொன்றைவேந்தன்

1. அன்னை = தாய்;
   பிதா = தகப்பன்;
   முன்னறி = முன் + அறி—முதன் முதலாகத் தெரிந்து கொள்ளப்படுகிற
2. பகைக்கின் = பகைத்துக்கொண்டால், விரோதித்துக் கொண்டால்
3. எண் = கணிதம், கணக்கு;
   எழுத்து = இலக்கண நூல்
4. கிட்டாது = கிடைக்காது;
   வெட்டென = உடனேயே
5. கீழோர் = தாழ்ந்தவர்
   தாழ = பணிவாக
   உரை = சொல்
6. சுற்றம் = சுற்றத்தார், பந்துக்கள், உறவினர்
7. கெடுவது = கெடுவதற்கு உரியதை
   விடுவது = அவனை விட்டு நீங்குவது
   கருமம் = காரியம், செய்யவேண்டிய கடமை
8. கைப்பொருள்தன்னின் = கையிலுள்ள பொருளைக்காட்டிலும்
   மெய்ப்பொருள் = உண்மையான பொருள்
9. சான்றோர் = நல்ல குணங்கள் நிரம்பியவர்கள், குணசாலிகள்
   என்கை = என்று (தன் மக்களை அன்னியர்) சொல்வது
   ஈன்றோட்கு = ஈன்றோளுக்கு—தாய்க்கு
10. சூது = கபடம், வஞ்சனை; வாது = சண்டை, வீண்வழக்கு;
    வேதனை = மனக்கஷ்டம்
11. சோம்பர் = சோம்பேறிகள்
    தேம்பி = ஏக்கமுற்று, ஏங்கி
12. தந்தை = தகப்பன்
    மந்திரம் = புத்திமதி
13. சிறந்தொரு = சிறந்த + ஒரு

14. திரை = அலை
    திரவியம் = செல்வம்
15. போரா = போர் + ஆ(க) — சண்டையாக
16. இணக்கம் = சிநேகம்
    அல்லல் = துன்பம்
17. நுண்ணிய = மிகச் சிறிய
    கருமம் = காரியம், செயல்
18. காலம் = உண்ணவேண்டிய காலம்
19. புலை = இழிவான காரியம் அல்லது மாமிச (உணவு)
    கொலை = உயிர்க்கொலை, உயிரைக் கொல்லுதல்
    தவிர் = விட்டுவிடு
20. பொல்லாங்கு = தீது
21. மருந்து = அமிர்தம்
22. மின்னுக்கு = மின்னலுக்கு
25. மேழி = கலப்பை
    கோழை = குற்றம்
26. வானம் = மழை
    தானம் = ஈகை, தருமம்
27. ஊக்கம் = உற்சாகம், முயற்சி
    ஆக்கம் = செல்வம்
28. ஓதாதார் = படியாதவர்
    உணர்வு = அறிவு

பழமொழி

1. அகத்தின் = மனத்தின்
8. ஊர = நகர்ந்து செல்ல
12. தூற்றிச்கொள் = (நெற்பொலியைத்) தூற்றிக்கொள்
17. திக்கற்றவன் = திக்கு + அற்றவன் — கதியற்றவன், அகதி
21. வல்லவன் = திறமையுள்ளவன், சாமர்த்தியசாலி

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS (P.I.C. NO. Q.H. MS. 5)
FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY IN INDIA (P.I.C. NO. MS. 70)—
7-2-1947. B 3309

136115

எழுத்து வரிசை

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

C. L. S. தமிழ் வாசகங்கள்

தமிழ் வாசகங்கள் 1—5 வகுப்புகளுக்கு

By S G DANIEL

அமிர்த வாசகங்கள் 1—5 வகுப்புகளுக்கு

By L. A. PITHAVADIAN

சித்திர வாசகங்கள் 1—8 வகுப்புகளுக்கும்

I—III பாரங்களுக்கும்

By P. N. APPUSAWMY &

J. P. MANIKKAM

தமிழ் களஞ்சியம் I—III பாரங்களுக்கு

By K. P. SANTOSH

N.B. முதல் மூன்று வாசக வரிசைகள் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் சக்கன்டரி பாடசாலையிலும் உபயோகிக்க அரசாங்கத்தாருடைய அனுமதி பெற்றவை.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

Post Box 501, Park Towr Madras

and at Bangalore Mysore Bezwada Colombo